விலை: வன்னி -ரூ.20 யாழ். - ரூ30 பக்கங்கள் 48

# உதயன்

சுடர் 30 கதிர் 235 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 3. ஞாயிற்றுக்கிழமை 19.07.2015




# வலி.வடக்கு விடுவிப்பில் இராணுவம் விடாப்பிடி

## மீள்குடியமர்வு குறித்து நேற்று நடைபெற்ற பலாலிக் கூட்டத்தில் முடிவேதும் இல்லை



யாழ்ப்பாணம், ஜூலை 19
மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில், மூடப்பட்டுள்ள பாதைகளை விடுவித்தல் மற்றும் எஞ்சிய காணிகளை விடுவித்தல் தொடர்பான விடயங்களில் இராணுவத்தினர் விடாப்பிடி யான நிலைப்பாட்டை, பலாலியில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் வெளிப் படுத்தியுள்ளனர். இதன் காரணமாக, புதிய காணி விடுவிப்புக்கள் தொடர்பான எந்த அறிவித்தலும் வெளியிடப்பட வில்லை.

பக்கம் 21

## யாழில் 15 ஆயிரம் பேர் தபால் மூலம் வாக்களிப்பர்

யாழ்ப்பாணம், ஜூலை 19
யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் 15 ஆயிரம் பேர் தபால் மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். கிளி நொச்சி, மன்னார் மற்றும் முல் லைத்தீவு மாவட்டங்களில் வாக்களிப்புக்கு தகுதி பெற்றவர்கள் தொடர்பான விவரங்கள் இன்னமும் இறுதிப்படுத் தப்பட வில்லை என்றும் இன்று அல்லது நாளையே முழுமையான விவரங்கள் வெளியாகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
எதிர்வரும் ஓகஸ்ட் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. கடந்த 14 ஆம் திகதி வரையில் கிடைக்

பக்கம் 21

## கே.பி குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு

கொழும்பு, ஜூலை 19
கே.பி.எனப்படும் குமரன் பத்மநாதன் குறித்த பரிந்துரைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக, முன்னாள் பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேன சிங்க தெரிவித்துள்ளார்.
கண்டியில் மல்வத்த பீடத்தின் மகாநாயக்கரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்து ஆசி பெற்ற பின்னர், செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் சுஜீவ சேனசிங்க பதிலளித்தார். அப்போது, கே.பி. இப்போது இலங்கையில் இருக்கிறாரா அல்லது வெளிநாட்டிலா என்று ஊடகவியலாளர்

பக்கம் 21

## அமைச்சுப் பதவிகளை துறக்க சு.கவினருக்கு கடும் அழுத்தம்

### மஹிந்த தரப்பினர் அதிரடி

கொழும்பு, ஜூலை 19
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட சர்ச்சைக்குரிய அறிவிப்பையடுத்து, அவர் தலைமையிலான அரசை ஆட்டம் காணச் செய்வதற்கு மஹிந்த தரப்பு காய்நகர்த்த ஆரம்பித்துள்ளது. இதற்கமைய அரசில் தற்போது அமைச்சர்களாகவும், இராஜாங்க அமைச்சர்களாகவும், பிரதியமைச்சர்களாகவும் பதவி வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை அப்பதவியிலிருந்து வெளியேறுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட அறிவிப்பையடுத்து, அடுத்த நாள் புதன்கிழமை உயர்கல்வி மற்றும் விஞ்ஞான ஆய்வு பிரதியமைச்சர் சுதர்சினி பெர்னாண்

பக்கம் 21

## தமிழ் அரசியல்வாதிகளை கொன்றவரும் வேட்பாளர்

### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இடமளித்துள்ளது என்கிறார் கருணா

கொழும்பு, ஜூலை 19
ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ் உள்ளிட்ட பல தமிழ் அரசியல் வாதிகளைக் கொலை செய்த, கொலைகாரனுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் இடம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த கொலைகாரன் தொடர்பில் தன்னிடம் ஆதாரங்கள் உள்ளதாக, முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் ஊடாக ஆசனம் வழங்கப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டுத் தான் ஏமாற்றப்பட்டுள்ளதாக, விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர

பக்கம் 21

## கூட்டமைப்பின் முதல் பரப்புரை மருதனார்மடத்தில் 25 ஆம் திகதி

### சம்பந்தன் உட்பட அங்கத்துவக் கட்சி தலைவர்கள் அனைவரும் பங்கேற்பர்

யாழ்ப்பாணம், ஜூலை 19
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டம் மருதனார்மடத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி இடம் பெறவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்

பக்கம் 21

## பிரிட்டன் கூட்டமைப்பினரை சந்தித்தார் வடக்கு முதலமைச்சர்

### பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்வு



யாழ்ப்பாணம், ஜூலை 19
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரிட்டன் கிளையினருக்கும் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.
அமெரிக்கப் பயணத்தை முடித்துக் கொண்டு, பிரிட்டனுக்குச் சென்

பக்கம் 21

## பயங்கரவாதம் பற்றிப் பேசி மக்களை அச்சுறுத்த முயற்சி

### மஹிந்தவைச் சாடுகின்றார் சம்பிக்க

கொழும்பு, ஜூலை 19
வடக்கு, கிழக்கில் பாதுகாப்பற்ற நிலைமை காணப்படுவதாகவும், புலிகள் உருவானபோது இவ்வாறான தொரு நிலைமைதான் அங்கு காணப்பட்டது என்றும் கூறி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் தேர்தல் பரப்புரையை ஆரம்பித்த நிலையில், பயங்கர வாதம் தொடர்பில் எந்தவித ஆதாரங்களுமின்றி மக்

பக்கம் 21




# மைத்திரி கொலை செய்யப்படலாம்

## எச்சரிக்கின்றது பிரஜா சக்தி அமைப்பு

கொழும்பு, ஜூலை 19
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்துகளுக்குப் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலைசெய்வதற்கான வாய்ப்புள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.
பிரஜா சக்தி அமைப்பு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.
அந்த அமைப்பால் நுகேகொடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட திரைப்பட இயக்குநர் தர்மசிறி பண்டாரநாயக்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
ஜனாதிபதி மைத்திரிபால அண்மையில் வெளியிட்ட கருத்துகள் மிகவும் முக்கியமானவை. அது அவரின் இதயத்தில் இருந்து வந்தவை. இந்தக் கருத்துகளுக்குப் பின்னர் அவரைக் கொலை செய்வதற்கான ஏதுநிலைகள் காணப்படுகின் றன. மைத்திரிபால சிறிசேனவைப் பாதுகாக்கும் பொறுப்பு எமக்குள்ளது" – என்றார். (த)

# இன, மத வாதங்களை தூண்டும் பரப்புரைகளில் ஈடுபடுவோர் கைதாவர்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 19
தேர்தல் காலத்தில் இனவாதம் மற்றும் மதவாதத்தைத் தூண்டும் வகையில் பரப்புரை செய்யும் வேட்பாளர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இனவாதத்தைத் தூண்டும் வகையில் பேசி மீண்டும் அளுத்கம பகுதியில் வன்முறைகளை தூண்ட சிலர் தயாராவதாக தகவல் கிடைத் துள்ளது. மீண்டும் இனவாதம் தலைதூக்க அரசு இடமளிக்கப் போவதில்லை.
கடந்த காலத்தில் இனவாதத்தை தூண்டும் வகையில் ஆற்றப்பட்ட உரைகளினால் அளுத்கம பகுதிகளில் கலவரம் வெடித்து இன நல்லுறவுக்குக் குந்தகம் ஏற்பட்டது.
இவ்வாறான விபரீதங்களை தடுக்க இனவாதம் மதவாதத்தை தூண்டும் வகையில் உரையாற்றுவோரை கைது செய்து நீதிமன்றத்தினூடாக 2 வருடம் வரை சிறைத் தண்டனை விதிக்கும் வகையில் குற்றவியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.
இம்முறை தேர்தலில் பொதுபல சேனவும் போட்டியிடுகிறது. அதன் செயலாளர் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிடுகிறார். அளுத்கம பகுதியில் பரப்புரைக் கூட்டமொன்றை நடத்தி அப்பகுதியில் கலவரம் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.
அப்பகுதியிலுள்ள பள்ளிகள், கடைகளைத் தாக்கவும் தயாராவதாக அறியக் கிடைத்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுப் பொலிஸாரால் கைதாவதன் மூலம் அரசியல் இலாபம் பெறுவதே இவர்களின் நோக்கமாகும். இதற்கு இடமளிக்க முடியாது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசு நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இனவாத சக்திகளின் செயற்பாடுகள் தடுக்கப்பட்டுள்ளன. அந்தச் சக்திகள் இனியொரு போதும் தலைத்தூக்க இடமளிக்கப் போவதில்லை–என்றார்.

# மீண்டும் மஹிந்தவுக்கு அதிகாரத்தை வழங்க தயாரில்லை மக்கள்

## தேசிய தொழிற்சங்க ஒன்றியம் தெரிவிப்பு

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் சர்வதேசத்தின் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்று சுட்டிக்காட்டியுள்ள தேசிய தொழிற்சங்க ஒன்றியம், நாடளாவிய ரீதியாக கிடைக்கப்பெறும் தகவல்களின்படி, மஹிந்த ராஜபக்ஷவுக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்க மக்கள் தயாராக இல்லை என்றும் தெரிவித்துள்ளது.
கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங் கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய தேசிய தொழிற்சங்க ஒன்றியத்தைச் சேர்ந்த பேராதனைப் பல்கலைக்கழ கத்தின் உபவேந்தர் பேராசிரியர் சாந்த ஹேன்னாயக்க இவ்வாறு கூறியுள் ளார்.
லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கொம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இடதுசாரிக் கட்சிகள் இணைந்து கொழும்பில் நடத்திய ஊடகவிய லாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறியுள்ளதாவது:–
இலங்கையின் உள் விவகார அரசியல் விடயங்களில் அமெரிக்காவும், இந்தியாவும் தலையிடுகின்றன. அவர்களின் நோக்கம் இலங்கையை அவர்களின் பக்கம் கொண்டு செல்வதே. அதற்காக அவர்கள் முயன்றார்கள். எனினும், இந்த வருடம் ஜனவரி 8ஆம் திகதி வரையில் அவர்களால் அதனைச் செய்யமுடிய வில்லை. இந்நிலையிலேயே அவர்கள் நாட்டின் தலைவரை மாற்றத் தீர்மானித்தார்கள்.
இதன்பொருட்டு அவர்கள் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தனர். துரதிர்ஷ்டவசமாக வாக்களித்தது எமது மக்களாக இருந்தாலும், அவ்வாறு புள்ளடியிட நிர்ப்பந்தித்தது இந்தியாவும், அமெரிக்காவும் என்பது மிகவும் உறுதியான விட யம்.
இதனிடையே, ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடவடிக்கையின் வெற்றியை மீண்டும் திசைதிருப்ப இடமளிக்கப்படக்கூடாது.
நாங்கள் பெற்றுக்கொண்ட ஜனநாயகத்தை அனைவரும் உணரக் கூடியதாக இருந்தது. ஜனவரி 8ஆம் திகதிக்கு முன்னர் உள்ள தீர்மானம் சிலருக்கு மறந்துபோய் விட்டது. எவ் வாறானாலும், ஜனவரி 8ஆம் திகதி புரட்சியை மீண்டும் வேறு திசைக்கு மாற்ற நாங்கள் ஒரு போதும் இடம் தரப் போவதில்லை.
நாடளாவிய ரீதியாக கிடைக்கப் பெறும் தகவல்களின்படி, மஹிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் மீண்டும் அதிகாரத்தை வழங்கத் தயாராக இல்லை–என்றார். (த)


# நீலாவணையில் மாணவியின் சடலம் மீட்பு

அம்பாறை, ஜூலை 19
அம்பாறை மாவட்டம் கல்முனைப் பொலிஸ் பிரிவிலுள்ள நீலாவணையில் மாணவியொருவரின் சடலம் நேற்றுச் சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக கல்முனைப் பொலிஸார் தெரிவித் தனர்.
கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் ஜி.சி.ஈ உயர்தரம் கற்கும் ஆர். சரண்யா (வயது 19) என்ற மாணவியே நீலாவணையிலுள்ள அவரது உறவினர் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சடலம் கல்முனை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காகக் கொண்டுவரப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# மனித உரிமை ஆர்வலர்களை பாதுகாப்பதற்கு வழிகாட்டல்

கொழும்பு, ஜூலை 19
மனித உரிமை ஆர்வலர்களைப் பாதுகாக்கும் வகையில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சில விசேட வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளது.
அரச அதிகாரிகளுக்கு இந்த விசேட வழிகாட்டல் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. சுதந்திரமாக ஒன்றுகூடுதல் உள்ளிட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் அனைத்து உரிமைகளையும் பாதுகாக்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.
நலிந்த மக்கள், நலிந்த சமூகம் அல்லது இனமொன்றின் குரலாக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் குரல் கொடுத்து வருவதாக மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டி யுள்ளது.
மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கடினமான உழைப்பை வழங்கி மனித உரிமைகளைப் பாதுகாக்க முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
உதாரணமாக மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தகவல்களைத் திரட்டி, அவற்றை ஆவணப்படுத்தி அவற்றை அம்பலப்படுத்தும் நடவடிக்கைகளை மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவித்துள்ளது.
இவ்வாறான பணிகளை மேற்கொண்டுவரும் மனித உரிமை ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள் பிராந்திய தேசிய மற்றும் சர்வ[illegible] ரீதியில் அழுத்தங்களையும் அடக்குமுறைகளையும் எதிர்நோக்க நேரிடுவதாகக் குறிப்பிட்டுள்ளது.
மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்காக பல்வேறு அழுத்தங்களையும் ஆபத்துக்களையும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் எதிர்நோக்க நேரிடுவதாகத் தெரிவித்துள்ளது. (த)

# மன்னாரில் சிறப்பான ரம்ழான்



மன்னார், ஜூலை 19
புனித ரம்ழான் பெருநாள் தொழுகைகள் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பள்ளிவாசல்களில் நேற்று சிறப்பாகவும் அமைதியாகவும் இடம் பெற்றன. முஸ்லிம் மக்கள் நேற்று ரம்ழான் பெருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள்.
மன்னார் மாவட்டத்திலும் அமைதியான முறையில் பெருநாள் தொழுகைகள் இடம் பெற்றன.
மன்னார் மூர் வீதி ஜும்மா பள்ளிவாசலில் மௌலவி அஸ்செய்க் எஸ்.ஏ.அசீம் தலைமையில் புனித ரம்ழான் பெருநாள் தொழுகையும்,விசேட பிரார்த்தனைகளும் இடம் பெற்றன. (த–56)

# அகதிகளுடன் கைதிகளையும் தடுத்து வைத்துள்ளதாம் ஆஸி.

## சிட்னி மோர்னிங் ஹரால்ட் தகவல்

சிட்னி, ஜூலை 19
ஆஸ்திரேலியாவில் இலங்கை அகதிகளுடன் பெரும் குற்றங்களைப் புரிந்த கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்தத் தகவலை த சிட்னி மோர்னிங் ஹரால்ட்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.
ஆஸ்திரேலிய அரசின் புள்ளி விவரங்களின்படி கிறிஸ்மஸ் தீவில் மாத்திரம் 448 பெரும் குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.
குறித்த குற்றவாளிகள் கொலை, கொள்ளை மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுடன் தொடர்புள்ளவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு தடுத்து வைக் கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் நியூஸிலாந்து, கனடா போன்ற நாடுகளிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
இதேவேளை, அகதி அந்தஸ்து கோருகின்ற இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்களையும் தடுத்துவைத்துள்ளமைக்குப் பல்வேறு எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன.
இவ்வாறு அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையானது மிகப் பெரிய ஆபத்தை ஏற்படுத்தும் எனச் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.
இந்நிலையில், அவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் தடுக்கும் நோக்கில் கிறிஸ்மஸ் தீவிலுள்ள பொலிஸாருக்கு விசேட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என ஆஸ்திரேலியா அரசு தெரிவித்துள் ளது.
அகதிகளைப் பாதுகாப்பதற்காக இவ்வாறான குற்றவாளிகளைத் தாக்குவதற்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# குடமியன் இந்து மயானத்தில் இறந்த மாடுகளின் கழிவுகள்

## துர்நாற்றத்தால் அங்கு செல்லமுடியாத நிலை

தென்மராட்சி, ஜூலை 19

வரணி குடமியன் இந்து மயானத்திற்குச் செல்ல முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரத்திற்கு கேடான நிலையில் அங்குள்ள பற்றைப் பகுதிகளில் இறந்த மாடுகளின் கழிவுகளும் காணப்படுகிறது

இது தொடர்பாக அப் பகுதியில் உள்ள மக்களிடம் கேட்டபோது,

கடந்த ஜனவரி தொடக்கம் கொடிகாமத்தில் இயங்கிய மாட்டிறைச்சிக் கடை மூடப்பட்டதையடுத்து அனுமதிப் பத்திரமின்றி இங்குள்ள பற்றைப் பகுதியில் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதாகவும், இறைச்சியை எடுத்துக்கொண்டு தோல் உட்பட எச்சங்களை அவ்விடத்திலேயே விட்டுவிட்டுச் செல்வதால் அயலில் உள்ள குடும்பங்களால் சகிக்க முடியாத அளவுக் குத் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையம், சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம், தென்மராட்சி பிரதேச செயலகம் போன்றவற்றுக்கு பல தடவைகள் முறைப்பாடு செய்தும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. அத்துடன் மயானப் பகுதிக்கு எவரும் வராததால் இரவு வேளைகளில் வாகனங்களில் வருவோர்; சட்டவிரோதமாக மாடுகளைக் கொண்டு வந்து இறைச்சிக்காக வெட்டி எடுத்துச் செல்வதாகவும் அவர்கள் மேலும் கூறினர்.

மாடுகளின் கழிவுகளை அங்கு செல்லும் நாய்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் இழுத்து வருவதாகவும், இந்தக் கழிவுகளைப் புதைக்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், சட்டவிரோதமாக மாடுகள் வெட்டுவதைத் தடுக்கப் பொலிஸார் இரவு வேளையில் கண்காணிப்பில் ஈடுபடவேண்டுமெனவும் அந்த மக்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக சுகாதாரப் பிரிவினருடன் தொடர்பு கொண்ட போது,

தமக்கு கிடைத்த முறைப்பாடு தொடர்பாக அங்கு சென்ற பார்வையிட்ட போது மயானத்தை அண்டிய பகுதிகளில் காணப்படும் பற்றைப் பகுதியின் பல இடங்களில் வெட்டப்பட்டு வீசப்பட்ட மாடுகளின் தோல் உட்பட எச்சங்கள் காணப்படுவதாகவும், இதனால் அயலில் வசிக்கும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அளவுக்கு துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## வெளிநாட்டுக்காரர் கைகளில் வேப்பம் பூ

தென்மராட்சி, மே 19

வேப்பம் பூசீசன் ஆரம்பித்துள்ளதால் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள புலம் பெயர் நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதனைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

காய்ந்த வேப்பம் பூ ஒரு கிலோ ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்வதைக் காணமுடிகிறது.

தாம் மீண்டும் வெளிநாடு செல்வதற்கிடையில் இங்கு வடகம் தயாரித்து காயவைத்துக் கொண்டு செல்லவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதனால் தென்மராட்சிப் பிரதேசச் சந்தைகளில் காய்ந்த வேப்பம் பூ விற்பனைக்குக் கொண்டு வரப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர். (த-9)

## பதிவும் பகிர்வும் நூல்வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை 19

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய "பதிவும் பகிர்வும்" நூலின் வெளியீட்டு விழா, சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெற உள்ளது.

விழாவுக்கு துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமை வகிக்க, யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். யாழ்.பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி வி.பி.சிவநாதன் வெளியீட்டு உரையை நிகழ்த்த திரு.திருமதி அ.சிதம்பரநாதபிள்ளை தம்பதியினர் நூலை வெளியிட்டு வைப்பார்.

பிஷப் சௌந்தரநாயகம் ஊடகக் கற்கை மையத்தின் பணிப்பாளர் அருட்திரு ரூபன் மரியாம் பிள்ளை, கிழக்குப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் செ.யோகராசா ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர்.

நூலின் முதற் பிரதியை, தவராஜா தம்பதியினர் பெற்றுக்கொள்வர். (அ)

## பம்மைமடு விபத்தில் பெண் ஒருவர் சாவு

வவுனியா, ஜூலை 19

வவுனியா பம்மைமடுப் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 6 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வவுனியா நெளுக்குளத்தைச் சேர்ந்த இந்திரகுமார் இரத்னகுமாரி (வயது-50) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் பம்மைமடுவில் இருந்து கிடாவூர் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த வானும் முன்னால் வந்த ஒட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இதில் ஒட்டோவில் பயணித்த பெண்கள் மூவரும், ஆண்கள் நால்வரும் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தை அடுத்து குறித்த வான் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

## கசிப்பு காய்ச்சியவர் மறியலில்

தென்மராட்சி, ஜூலை 19

மட்டுவில் சந்திரபுரம் கசிப்பு உற்பத்தியாளரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பொலிஸாரால் மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்ட நபரை நேற்று நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் இந்த நபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-9)

## மரத்திலிருந்து விழுந்தவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 19

மரத்தில் இருந்து தவறி விழுந்தவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான நல்லான் பாலேந்திரம் (வயது-53) என்பவரே இவ்வாறு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

தேங்காய் பறிப்பதற்காக மரத்தில் ஏறியபோது தவறுதலாக மரத்தில் இருந்து கீழே விழுந்துள்ளார். பலத்த முறிவுகளுக்கு உள்ளான இவர் ஓட்டோ மூலம் கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக மாற்றப்பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த இவர் நேற்று முன்தினம் முற்பகல் 11.45 மணியளவில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (து-ரி)

## பாம்புக் கடியால் குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 19

பாம்புக் கடியால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று முன்தினம் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

குடத்தனை மேற்கு குடத்தனையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ஆசையன் பரமமூர்த்தி (வயது-65) என்பவரே இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு பாம்புக் கடிக்கு உள்ளாகியுள்ளார். இதனை அடுத்து மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு ஓட்டோ மூலமாகக் கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு இவருக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டபோதும் நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார். (த-ரி)


## தயாசிறிக்கு குருநாகலில் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 19

குருநாகல் – இந்துல்கொட முதல் கடுபிட்டிய வரையான வீதியைப் புனரமைப்புச் செய்யக் கோரி அந்தப் பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அவ்விடத்துக்குச் சென்ற வடமேல் மாகாண முதலமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட வேட்பாளருமான தயாசிறி ஜய சேகரவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தட்டிக்கழிக்க முடியாத சமூகப் பொறுப்பு இது

♦ வாய்த்தர்க்கம் விபரீதத்தில் முடிந்தது. கத்திக்குத்தில் இளைஞர் பலி.

♦ போதையில் ரகளை செய்த எண்மருக்கு நீதிமன்றம் தண்டனை விதித்தது.

♦ பொலிஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்து வந்த கசிப்பு உற்பத்தியாளர் கைது.

♦ போக்குவரத்து விதியை மீறியவர்களுக்குத் தண்டப்பணம்.

♦ அரச சாராயம் வைத்திருந்தவருக்கு அபராதம்.

♦ ரயில் நிலையத்தைச் சேதப்படுத்தியவருக்கு மறியல்.

♦ வீட்டுக்குள் புகுந்து தாக்கிய நபருக்கு விளக்கமறியல்.

வடக்கில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் சில நாள்கள் இடைவெளியில் இடம்பெற்ற குற்றச் சம்பவங்களில் மிகச் சிலவே மேற்போந்தவை.

மற்றொரு வகையில், இவற்றைப் பத்திரிகைகளில் படிக்கும் போது, வக்கரித்த மனம் கொண்டவர்களின் எண்ணிக்கை வடக்கில் வேகவேகமாக அதிகரித்து வருவது மிகத் துல்லியமாகத் துலங்குகிறது!

எமது சமூகம், குறிப்பாக இளைய சமுதாயம் சட்டவிரோதச் செயல்களால் ஏற்படும் அவற்றின் விளைவுகளின் தாக்கம் புரியாமல், தாம் நினைத்த எதனையும் செய்யலாம், அதர்ம வழி நடக்கலாம், செயற்படலாம் என்ற மனப்போக்கில் வாழ்வது பட்டெனத் தெரிகிறது.

இந்தத் தருணத்தில், எமது விழுமியங்களைப் பேண வேண்டிய சமூக, சமய அமைப்புக்கள் கைகட்டி வாய்பொத்தி நிற்கின்றனவா? இல்லையேல் அவற்றின் கைகள் கட்டப்பட்டுள்ளனவா என்ற வினா மேல் எழுகிறது அல் லவா?

சட்டம், ஒழுங்கைக் கடைப்பிடிப்பதில் அல்லது உரிய முறையில் நிறைவேற்றுவதில் பள்ளங்கள் கிண்டப்படுகின்றனவா என்ற சந்தேகம் மேல் எழுவதையும் தவிர்க்க இயலவில்லையே!

மறுபுறத்தில் இருந்து நோக்கும் வேளை, எமது இளம் சந்ததியினரை தக்க முறையில் வழிநடத்த இயலாத பலவீனம் மூத்தவர்களிடம், பெற்றோரிடம், ஆசிரியர்களிடம் தேய்ந்து விட்டதா, தேய்ந்து செல்கிறதா என்ற பென்னம்பெரு வினாவும், உயர்ந்து வளர்ந்து வருகிறதா என்ற வளைந்து போன படிமானமும் பரவுகிறது.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்ற அர்த்தம் நிறைந்த கருத்தியல், எமது மத்தியில் எமது வாழ்வியலில் ஊன்றி வேர் விடாமல் இருப்பதும், இத்தகைய சமூகச் சாபக்கேடுகளுக்கு வலுச் சேர்க்கின்றது.

இந்த இயலாமையை எம்மில் பலர் மூடி மறைக்க முனைவதும், முயல்வதும் எங்கள் சமூகத்தைப் பீடித்துள்ள சாபக்கேடாக ஓங்கி உயர்வது தடுக்கப்படுவதும் எப்போது?

திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகள் இதற்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

எம்மத்தியில் உயர்ந்து வளரும் சமூகச் சீர்கேடுகளை, குறிப்பாக இளைய சமுதாயத்தினரிடம் பரவிவரும் ஒவ்வாத செயல்களை தடுப்பதற்குப் பொலிஸாருக்கு உதவவேண்டிய பெரும் கடமை பெரியோர், பெற்றோருக்கும் அதிக அளவில் உண்டு.

மற்றொரு வகையில் கூறுவதானால், அந்தப்பொறுப்பை பிறிதொரு தரப்பின் மீது சுமத்திவிட்டு வாளாவிருக்கும் போக்கைத் தவிர்த்து, அந்தப் பொறுப்பு அனைத்துத் தரப்பினருக்கும் உரியதொன்று என்ற உணர்வுடன், சமூகத்தின் ஒட்டுமொத்த அங்கங்களும் இந்த விடயத்தில் அக்கறை காட்டிச் செயற்பட வேண்டும். இன்றைய காலத்தின் தேவை அது.

சம்பந்தப்பட்ட தரப்புகள் அதற்கு மனம் கொள்வது எப்போது....?

# பிரதமர் தெரிவு அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது

## சரத் என். சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 19

நாட்டின் பிரதமரைத் தெரிவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுள் பெரும்பான்மையினரின் ஆதரவே பிரதமரைத் தெரிவுசெய் வதற்குத் தேவையானது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் தெரிவு தொடர்பில் ஜனாதிபதி அண் மையில் வெளியிட்ட கருத்து ஜனநாயக விரோதமானது.

பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரை ஆதரிக்கின்றார்களோ அவரையே பிரதமராகத் தெரிவுசெய்ய வேண்டும். அவ்வாறான ஒருவரை நியமிப்பதே ஜனாதிபதியின் கடமையாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிழையான முன்னுதாரணத்தை வழங்கியுள்ளார். ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர், பெரும்பான்மை இல்லாத ஒருவரைப் பிரதமராகத் தெரிவு செய்தார்.

இது அரசமைப்புக்கு முரணான ஒரு நடவடிக்கையாகும். அரசமைப்பைப் பாதுகாப்பதனை விடவும் ஜனாதிபதி, தம்மைப் பதவியில் அமர்த்திய தரப்புடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக் கையைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சித்தார். இது ஜனநாயகமான நாடொன்றுக்கு உசிதமான காரியமல்ல- என்றார். (த)

# தொலைக்காட்சி மீது வழக்குக்கு சட்டமா அதிபரின் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 19

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு நேரம் தொடர்பாகப் பொய்யான அறிவித்தலை ஒலிபரப்பிய யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்குச் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற உள்ளதாக யாழ். பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குறித்த தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளர் மன்றில் முன்னிலையாகியிருந்தார். அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி இந்தச் சம்பவம் தேர்தலுடன் தொடர்புடைய குற்றம் என்பதால் யாழ். நீதிவான் நீதிமன்றத்துக்கு இதனை விசாரிப்பதற்கு நியாயாதிக்கம் இல்லை எனவும், இது தொடர்பாக எவ்வித சாட்சியங்களும் இல்லாத நிலையில் வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டு மெனவும் கோரினார்.

இதற்கு பதிலளித்த யாழ்ப்பாண பொலிஸார், வழக்கு தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவுள்ளதாகவும், எனவே அதற்கு தவணை ஒன்று வழங்குமாறும் மன்றில் கோரினர். அதனைத் தொடர்ந்து இந்த வழக்கு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-103)

# பிரபாகரனின் நோக்கமா ரணிலின் நோக்கம்?

## மஹிந்த கேள்வி

கொழும்பு, ஜூலை 19

மஹிந்தவை துடைத்தெறிய வேண்டும்; கொல்ல வேண்டும்; புதைக்க வேண்டும் என்ற பிரபாகரனின் நோக்கம், தற்போது ரணிலின் நோக்கமாக உள்ளதா?

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் குருநாகல் மாவட்ட வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பினார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர் தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மஹிந்தவை துடைத்த தெறிய வேண்டும்; மஹிந்தவைக் கொல்ல வேண்டும்; மஹிந்தவைப் புதைக்க வேண்டும் என்று கூறி வருகின்றார். இதைத்தான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் கூறினார். அப்படியாயின் பிரபாகரனின் நோக்கம் ரணிலின்நோக்கமாகியுள்ளதா? ரணில் என்னைத் துடைத்தெறிய நினைத்தார். முடியவில்லை. அதனால், தற்போது மக்களின் உரிமைகளைத் துடைத்தெறிய முயற்சிக்கின்றார் - என்றார். (த)

# ஐ.தே.முவின் விஞ்ஞாபனம் அடுத்த வாரத்தில் வெளியீடு

கொழும்பு, ஜூலை 19

பெரும் அபிவிருத்தித் திட்டங்களுடன் கூடிய ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான கயந்த கருனாதிலக்க அறிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, கிராம அபிவிருத்தி, புதிய வர்த்தக வலய உருவாக்கம் என பல்வேறு மக்கள் நலன்களும், நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் இதில் உள்ளடக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை, ஜே.வி.பியின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 23 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. இதற்கான நிகழ்வு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (த)

# 790 இலக்க பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 19

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கொழும்புத்துறைப் பிரதேசத்துக்கான 790 வழி இலக்க பஸ் சேவையை மீள ஆரம்பிக்குமாறு பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

யாழ்.பஸ்தரிப்பு நிலையத்துக்கும் கொழும்புத்துறைக்குமான இந்த 790 வழி இலக்க பஸ்சேவை கடந்த சில வருடங்களாக நிறுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த பஸ்சேவை நடத்தப்பட்டபோதும் போதிய பயணிகள் இன்மையால் போக்குவரத்துச் சபை இதனை நிறுத்தியது.

இந்த பஸ் யாழ். நகரில் இருந்து கரையோரப் பகுதி ஊடாக பாசையூரைச் சென்றடைந்து, அங்கிருந்து கொழும்புத்துறை துறைமுகச் சந்தியைச் சென்றடைவது வழக்கம்.

இந்த பஸ் சேவை தற்போது நடைபெறாமையால் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் போன்றவர்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக இந்தப் பஸ்சேவையை துறைமுகச் சந்தியில் இருந்து மணியம் தோட்டச் சந்தி வரைக்கும் விஸ்தரித்து அந்தப் பகுதி மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைக்கு தீர்வு காண வழிவகுக்க வேண்டும் என்று பொது அமைப்பினர் கேட்டுள்ளனர். (த-17)

# பாவனைக்குதவாத யோக்கட்; இளைஞருக்கு ரூ.5000 தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

உரிய முறையில் களஞ்சியப்படுத்தப்படாமல் விநியோகிக்கப்படுவதற்கு தயாராக இருந்த பெரும் எண்ணிக்கையான யோக்கட்டுக்களையும், தயிரையும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று முன்தினம் கைப்பற்றினர்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் விநியோகிப்பதற்கு தயரான நிலையில் வான் ஒன்றில் வைக்கப்பட்டிருந்தபோதே இந்தப் பொருள்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் அவற்றை விநியோகிப்பதற்காகக் கொண்டு சென்ற ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். குறித்த இளைஞரை 5ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறும், கைப்பற்றப்பட்ட பொருள்களை அழிக்குமாறும் நீதிவான் பெ. சிவகுமார் உத்தரவிட்டார். (த-103)

## விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

நாகர்கோவில் பூர்விக நாகதம்பிரான் ஆலய நிர்வாக நடைமுறைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி கூட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (த–ரி)

## மொழிபெயர்ப்பு கற்கை நெறிக்கு அனுமதித் தேர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 2014/2015 கல்வியாண்டுக்கு மொழிபெயர்ப்புக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதித் தேர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மு.பகல் 11மணி முதல் 2 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், கிழக்குப் பல்கலைக் கழகம் மற்றும் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனம் ஆகிய பரீட்சை நிலையங்களிலும் நடைபெறும். முன்னர் அறிவிக்கப்பட்டவாறு காலை 9 மணிக்கு நடைபெறமாட்டாது. மாணவர்கள் குறித்த நேர மாற்றத்தைக் கவனத்தில் கொள்ளவும் என யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார். (த)

## கல்வி முகாமைத்துவ கற்கைகளுக்கு விண்ணப்பிக்கலாம்

மீப்பேயில் உள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி முகாமைத்துவ பீடம் நடத்தும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (முழுநேரம் மற்றும் பகுதி நேரம்) கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவை மற்றும் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் இரண்டாவது வினைத்திறன் தடை தாண்டலில் ஓரங்கமாகக் கொள்ளப்படும் இக்கற்கை நெறிக்கான தெரிவு போட்டிப் பரீட்சை மூலம் இடம்பெறவுள்ளது. மேலதிக விவரங்களை தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளத்தில் பார்வையிடமுடியும். முழுநேரக் கற்கைக்கான விண்ணப்ப முடிவு நாள் ஓகஸ்ட் 31. பகுதிநேரக் கற்கைக்கு ஒக்ரோபர் 31. முழு நேரக் கற்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 02 ஆம் திகதியும் பகுதி நேரக் கற்கை நெறி எதிர்வரும் 2016 மார்ச்சிலும் ஆரம்பமாகவுள்ளன. இதே வேளை பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங் களும் கோரப்பட்டுள்ளன. இதன் விண்ணப்ப முடிவுத் திகதி செப்ரெம்பர் 31ஆம் நாள் ஆகும். (த)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்கத்தின் ஆறாவது வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ் மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்கத்தின் ஆறாவது வருடாந்த பொதுக் கூட்டம் யாழ் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். மாவட்ட சங்கத்தின் தலைவர் வி.சிறி சக்திவேல் தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன் வாழ்த்துரை வழங்கவுள்ளார். தமிழ்ச் சங்கத்தின் தலைவர் ஜி.ஏ.ஜே.சில்வெஸ்ரர் சிறப்புரை ஆற்றவுள்ளார். பிரதேச செயலக பிரிவு சங்கங்களின் நிர்வாகிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் க.கதிரமலை அறிவித்துள்ளார். (த–11)


### வேலை ஆள்கள் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்கு கீழ்க்காணும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

* சிற்றுண்டி தயாரிப்பாளர்
* றொட்டி தயாரிப்பாளர்
* சமையல் வேலையாள்கள்
* உணவு பரிமாறுபவர்கள்
* தேநீர் தயாரிப்பாளர்

தங்குமிடவசதி, உணவு இலவசம், சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். (59783) (45.3.7)

தொடர்பு: 077 716 2904, 077 757 4752



சர்வதேச அங்கீகாரம் பெற்ற விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான

IATA Accredited Agent

### METRO
Travels & Tours (Pvt) Ltd.

**எமது சேவைகள். . . .**

* மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
* விசேட விலைக்கழிவில் கொழும்பிலிருந்து லண்டன் சென்று வருவதற்கான விமானப் பயணச் சீட்டு ரூபா 128,500/= மட்டுமே (06 Months)
* விசேட விலைக்கழிவில் கொழும்பிலிருந்து கட்டார் செல்வதற்கான பயணச் சீட்டு ரூபா 16,000/=
* இந்தியா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.

★ வெளிநாட்டு கடவுச் சீட்டுகளுக்கான இலங்கை விசா புதுப்பித்தல்...

இவை அனைத்தையும் நீங்கள் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்...

**METRO TRAVELS & TOURS (Pvt) Ltd,**
# 272/1, Stanley Road, Jaffna, Sri lanka.
Tel: 021 221 9424, 0212224647, 0212217199,
Mobile : 077 379 8767, 0777881115
Email: Bartheeban@metrotravels.lk



### கோழித்தீன் தயாரிப்பு ஆலைக்கு மூலப்பொருள் வழங்குநர் தேவை

குருநாகல் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சகல வசதிகளும் கொண்ட எமது அதிநவீன கோழித்தீன் தயாரிப்பு கூட்டு ஆலையானது எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் (2015) இயங்கவுள்ளது.

இவ்வாலைக்குத் தேவைப்படும் பின்வரும் பொருள்களைக் கிரமமானமுறையில் வழங்கக்கூடியவர்கள் தேவைப்படுகின்றனர்.

* சோளம்
* அரிசித் தவிடு
* உடைந்த அரிசி (Broken Rice)
* ஏனைய மூலப் பொருட்கள்

நவம்பர் 2015 முதல் இப் பொருட்களை வழங்கக் கூடியவர்களை எதிர்பார்க்கின்றோம். உங்களுக்கு இதில் ஆர்வமுண்டெனில் உங்கள் விபரங்களை வழங்கி எம்முடன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

1. உங்களால் வழங்கக்கூடிய மூலப் பொருட்கள்
2. மாதாந்தம் வழங்கக்கூடிய அளவு
3. உங்கள் தற்போதைய வியாபாரம் அல்லது தொழில்
4. உங்களால் முடியுமான போக்குவரத்து வசதி
5. உங்கள் தொடர்பு தொலைபேசி எண்

ஆகிய விடயங்களை உள்ளடக்கி எமக்கு எழுதவும்

நிறைவேற்று பணிப்பாளர்

BAIRAHA பைரஹா ஃபாம்ஸ் பீஎல்ஸி
407, காலி வீதி, கொழும்பு 03.
ஈமெயில்:- corporateoffice@bairaha.com
"Only short listed candidates will be notified"



விரைவில் உதயமாகிறது

### EL BETHEL COLLEGE

PRE SCHOOL | VOCATIONAL TRAINING | ENGLISH LANGUAGE TRAINING

NAVATKULI JUNCTION, KAITHADY, JAFFNA.

தனது கல்விச்சேவையை முதன்முறையாக யாழ் மண்ணில் நாவற்குழி சந்தியில் செப்ரம்பர் மாதத்தில் ஆரம்பிக்கின்றது.

இன்றைய நாளைய உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் உங்கள் பிள்ளைகளை ஆரம்ப நிலையில் இருந்து மேற்படிப்பு வரை ஆங்கிலத்தில் பேசவும், கற்கவும் எங்களை நாடுங்கள்

2½ வயது முதல்

உங்கள் பிள்ளைகளின் அனுமதிக்கு இன்றே முந்திக்கொள்ளுங்கள் !

021 205 0963, 077 208 0958, 077 433 1841
(போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்துகொடுக்கப்படும்)



### தொழில் வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில்

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

ஊதுபத்தித் துறையில் முன்னோடிகளான பொபி இல்லத்திற்கு வியாபார பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர்.

* ஊதுபத்தி விற்பனையில் 3 வருட அனுபவம், சரளமாக ஆங்கிலம் ,சிங்களம் பேசக் கூடியவர்கள்.
* விண்ணப்பதாரி 40 வயதிற்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும் .
* யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டிருக்க வேண்டும் .

உங்களது விண்ணப்பப் படிவங்கள் யாழ்ப்பாணத்தில் பரிசீலித்து கொம்பனியால் நேர்முகத் தேர்வு திகதி அறியத்தரப்படும்

Bobby Over Seas No. 177,
Balagolla ,Kengalla.
Email: bobbyhaji@yahoo.co

(63207) (3.7.5)



### கேள்வி அறிவித்தல்

செட்டிகுளம் ப.நோ.கூ சங்கத்தின் நவீன அரிசி ஆலை, பப்பட ஆலை என்பன ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. குத்தகைக்கு எடுக்க விரும்புபவர்கள் கேள்விப்பத்திரங்களை எதிர்வரும் **2015.08.30** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பி வைக்கவும். பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு - அரிசி ஆலை, பப்பட ஆலையினை பார்வையிட விரும்புபவர்கள் தொடர்புகளை மேற்கொண்டு அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**தலைவர் - செட்டிகுளம் ப.நோ.கூ சங்கம்,**
**பிரதான வீதி, செட்டிகுளம்.**
தொடர்பு - தலைவர் - 077 468 5543,
பொது முகாமையாளர் - 077 343 5871

(61127)(3.7.11)



### யாழ்ப்பாணத்தில் ஆடைதயாரிக்கும் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு

கொழும்பினைத் தளமாகக் கொண்டு இயக்கும் பிரசித்திபெற்ற (Lee Hedges PLC) ஆனது தனது (CSR) சமூக கூட்டுப்பொறுப்பு திட்டத்தின் கீழ் ஆடைகளைத் தைத்து உள்ளூர் மற்றும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக யாழ்ப்பாணம், மானிப்பாயில் ஆரம்பிக்கவுள்ள எமது தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள தகைமையுள்ள ஆளணியினரை வேலையில் இணைத்துக் கொள்வதற்கான கீழ்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

**★ தொழிற்சாலை முகாமையாளர்**

ஆடைத் தொழிற்சாலையை நிர்வகிப்பதிலும் முகாமைத்துவம் செய்வதிலும் சிறந்த அனுபவம் உடையவராக இருப்பதுடன் ஆடை ஏற்றுமதித்துறையில் அறிவு பெற்றிருத்தல் அவசியம்.

* மனித வளம் மற்றும் அலுவலக நிர்வாகத்துறையில் அனுபவம்.
* மும்மொழிகளிலும் தேர்ச்சி.
* பெண் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை.


**★ மேற்பார்வையாளர் - பெண்கள்**

* டிப்ளோமா அல்லது வியாபார சான்றிதழ் ஆகக் குறைந்த நான்கு வருட அனுபவம்.
* பயிற்றுவிப்பாளர் (பெண்கள்) ( அனுபவம் உள்ளவர்கள்)
* தையல் இயந்திரம் இயக்குபவர் (பெண்கள்) அனுபவம் உள்ளவர்கள்.
* பயிலுநர் இயந்திரம் இயக்குபவர் ( பெண்) (18-30 வயது)
* இயந்திரம் திருத்துபவர் யூக்கி (JUKI) தையல் இயந்திரம் திருத்துவதில் அனுபவம்.
* மின்னியலாளர்
* உதவியாளர் (ஆண், பெண்)
* பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண், பெண்)

எதிர்பார்க்கப்படும் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு பேசித் தீர்க்கக் கூடிய சம்பளம் வழங்கப்படும். ஆர்வம் உள்ள விண்ணப்பதாரிகள் விளம்பரம் பிரசுரமாகி 14 நாள்களுக்குள் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது தபாலிலோ தங்கள் விண்ணப்பங்களை (CV) அனுப்பி வைக்கவும்.

Email: pplh@leehedges.lk
Lee Hedges PLC(CSR Project)
No 353, Galle Road, Colombo 03.

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் தம்பிராசா
(முன்னாள் பிரதம கணக்காளர் புகையிரத திணைக்களம்)

தென்புலோலியைப் பிறப்பிடமாகவும் மாவில் வீதி, புலோலி தெற்கு புலோலியை வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் தம்பிராசா (முன்னாள் பிரதம கணக்காளர் - புகையிரத திணைக்களம்) 17.07.2015 வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - கண்ணாத்தைப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் Dr. சந்திரகுமார் (USA), திருமதி கௌரி பஞ்சலிங்கம் (ஆசிரியை புலோலி மெ.மி.த.க.பாடசாலை), வசந்தகுமார் (பாபு கனடா), திருமதி பவானி பாலசுப்பிரமணியம் (கனடா), காலஞ்சென்ற செல்வி சாந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் (BOC), பாலசுப்பிரமணியம் (கனடா), நளினா(USA), சுசி(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனோஜா, மைதிலி(வயம்ப பல்கலைக்கழகம்), வள்ளி, பிரணவி, லக்ஷ்மி(USA), பிரசன்னா, சுவாதி(கனடா), மகிழன், விதுசன்(கனடா) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, பொன்னையா, தங்கம்மா, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் வள்ளி நாயகி, திருச்செல்வநாயகம், பரமேஸ்வரி(கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை (20.07.2015) பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - திருமதி கௌரி பஞ்சலிங்கமும் (புலோலிமெ.மி.த.க. பாடசாலை), குடும்பத்தினரும்.

மாவில் வீதி,
புலோலி.

## மரண அறிவித்தல்

### சதாசிவம் கணேஸ்வரன்
(BA, Dip in Edu, MED, SLPS II அதிபர் புங்குடுதீவு மகாவித்தியாலயம்)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் யாழ். திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் கணேஸ்வரன்(அதிபர் புங்குடுதீவு மகாவித்தியாலயம்) 16.07.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீ.சதாசிவம் - ச.சௌந்தரம் தம்பதியரின்அன்பு மகனும் லோகாம்பிகை (கொழும்பு), கமலாம்பிகை (கனடா), நகுலேஸ்வரன்(பிரான்ஸ்) காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மாணிக்கவாசகர், கதிரவேலு, கருணாதேவி, அம்பிகாவதனி ஆகியோரின் மைத்துனரும் பிரபா(ஆசிரியை) மணிகண்டன், கம்சா(கனடா), கருணாகரன் (கனடா), காங்கேயன்(கனடா), சாலினி (ஆசிரியை), தரணிதரன்(லண்டன்) ஆகியோரின் ஆசை மாமனாரும் வித்தியா,தர்மேஸ்வரா(பிரான்ஸ்) ஆகியோரின் அருமை சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் மதியம் 2.30 மணிவரை யாழ். புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் அஞ்சலிக்காகவைக்கப்பட்டு நாளை (20.07.2015) திங்கட்கிழமை கொழும்பு ஜெயரட்ண மலர்ச்சாலையில் முற்பகல் 11 மணியளவில் இறுதி கிரியைக்கள் நடைபெற்று பூதவுடல் பொறளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :-
லோகாம்பிகை 077 445 7516 (c 17981)

தகவல் :-
குடும்பத்தினர்.

## புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்துக்கு விருது

அச்சுவேலி, ஜூலை 19

நாடளாவிய ரீதியில் பாடசாலைகள் இடையே பிரிட்டிஷ் கவுன்ஸில் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட விருது வழங்கல் 2014 – 2015 போட்டியில் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் முதல் பத்துப் பாடசாலைகளில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டு விருது பெற்றுள்ளது.

நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 143 பாடசாலைகள் இடையே போட்டிகள் நடத்தப்பட்டன. யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் இடையேயும் நாடளாவிய ரீதியிலும் புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம் முதல் பத்து இடங்களுக்கு உள்ளே தெரிவு செய்யப்பட்டுள்ளது. (த–11)


### கார் விற்பனைக்கு
ஓர் மதகுருவின் சொந்த பாவிப்பில் மிகவும் நல்ல நிலையில் உள்ள TATA INDIGO வகை NPJQ தொடர் இலக்கத்தைக் கொண்ட கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு
077 232 7058


## மரண அறிவித்தல்



### திருமதி பூமாலட்சுமி அப்பையா

யாழ் தாவடியை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமாலட்சுமி அப்பையா 14.07. 2015 செவ்வாய்க்கிழமை கனடாவில் கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பார்வதி தம்பதியினரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - விசாலாட்சி தம்பதி யினரின் அன்பு மருமகளும் M.S.அப்பையா அவர்களின் அன்பு மனைவியும் பாலகுமாரன் (தாவடி), பாலசுப்பிரமணியம், பாலேந்திரன், பாலகாந்தன், ஜெகதீஸ்வரி, பாலபாஸ்கரன், காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் (கண்ணன்), பாலராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சாம்பசிவம், சிவசிதம்பரம், நடராஜா, தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலைச்செல்வி, கலாதேவி, சிவகாமசுந்தரி, பரமசிவம், நிர்மலா, விஜிதா, ராதிகா ஆகியோரின் பாசமுள்ள மாமியாரும் தக்ஷாயினி, ருக்ஷாயினி, நிருஜன், மதுசாயினி, வானுஜன், நிஜந், நிவித், நிலானி, திசோர், திசிகா, செந்தூரன், ஆருரன், துவாரகா, காசினி, இந்துஜா, கஸ்மியா, அர்ஜீன், திலோஸ், புவிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நடராஜா, சுப்பையா, ரத்தினம், சரஸ்வதி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.07.2015) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு
021 205 3054, 077 217 8921

தகவல் - மகன்
அ.பாலகுமாரன் (தாவடி)

## மரண அறிவித்தல்

### செல்லையா சச்சிதானந்தன்
(அண்ணாதாசன், வேலணை ஆனந்தன்)
(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் வேலணை, நயினாதீவு, யாழ்ப்பாணம்)



வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் 107, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சச்சிதானந்தன் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோகவனம் செல்லையா(இளைப்பாறிய ஆசிரியர்-செல்லையா வாத்தியார்) யோகநாயகி ஆகியோரின் ஏக புதல்வனும் நயினாதீவு 5ஆம் வட்டாரத்தை சேர்ந்த காலஞ்சென்ற முத்துவேலு(ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்) நாகம்மா தம்பதிகளின் மருமகனும் இரஞ்சிதமலர்(சமுநல சேவைத்திணைக்களம், வேலணை , சண்டிலிப்பாய்) அன்புக்கணவரும் ஷண்முகப்பிரியா (ஆயுர்வேத வைத்தியர் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை), தமிழன்பன்(முகாமைத்துவ உதவியாளர், கல்வி அமைச்சு வடமாகாணம்) ஆகியோரின் அருமைத் தந்தையும் காலஞ்சென்றவர்களான மு.சண்முகநாதன், மு.தவராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருமதி சண்முகநாதன் மகேஸ்வரியின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டி ஈமக்கிரியைகள் இன்று (19.07.2015)ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று இறுதிக்கிரியைகள் பி.ப 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 107 நாயன்மார் வீதி,
கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்.

(63097)

தகவல் :-
குடும்பத்தினர்.
077 249 7160
(மகன்)



### வேலையாள்கள் தேவை
யாழ் நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு விற்பனையாளர், விற்பனை உதவியாளர் தேவை.
யாழ்- கொழும்பு பஸ் ஆசன பதிவாளரும்
குறிப்பு:- ஆண்கள் மட்டும். ஆர்வம் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு: 076 864 4558

### பணிப் பெண் தேவை
வெள்ளவத்தையில் வயதான தாயாரைப் பராமரிப்பதற்கும் மூவர் அடங்கிய குடும்பத்திற்கு வீட்டுவேலையில் செய்யக்கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் உடன் தேவை. சம்பளம் 17000
தொடர்பு: 071 430 8881

### கார் விற்பனைக்குண்டு
GD - xxxx இலக்கமுடைய Nissan Pulsar
மொடல் கார் (சில்வர் கலர்) விற்பனைக்குண்டு
தொடர்பு : 075 416 6780, 077 568 0199


## மரண அறிவித்தல்

### சிவசம்பு நாகராசா



அளவெட்டியைப்பிறப்பிடமாகவும் இல-23 தாமரை வீதி ஆறுகால் மடத்தைவசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு நாகராசா 17.07.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு-நாகம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை விசாலாட்சி தம்பதியரின் மருமகனும் கமலாதேவியின் அன்புக்கணவரும் சிறிப்பிரியா(வவுனியா) சொலேயன், றஜீவன்(கட்டார்), கஜேந்திரன், பத்மப்பிரியா ஆகியோரின் அன்புத்தந்தையும் நந்தகுமார்(வவுனியா), கிருஷாந்தினி, றேணுகா, செல்வமலர், மிர்நாளன்(USA) ஆகியோரின் அன்பு மாமனும் கோபிதா, ஜதுசன், கேதுசன், மோனிஷன், டென்சியா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், சிவசுப்பிரமணியம், பாக்கியநாதன், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மலிங்கம் (அக்கராயன்), தேவராசா(மலேசியா), மகேந்திரராசா(நோர்வே), சிறீஸ்கந்தராசா(டென்மார்க்) மற்றும் காலஞ்சென்றவர்களான லோகராசா, ஆனந்தராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.07.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இல-23 தாமரை வீதி,
ஆறுகால்மடம்,
யாழ்ப்பாணம்.

(63092)

தகவல் :-
குடும்பத்தினர்,
077 918 1367

## மரண அறிவித்தல்

### பரமநாதன் நிமலதாசன்



சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் பிரான்சினை வதிவிடமாகவும் கொண்ட பரமநாதன் நிமலதாசன் 04.07.2015 காலமானார்.

அன்னார் பரமநாதன்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சுப்பிரமணியம் அன்னலட்சுமி தம்பதியரின் அருமை மருமகனும் சுபானந்தினியின் அன்புக் கணவரும் நிருஷன், நிலேஷன், நிருஷிகா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்திதாசன், ஜெயரஞ்சினி, ஜெயதாசன்(பிரான்ஸ்), பாலரஞ்சினி, பிரதிபரஞ்சினி(பிரான்ஸ்), சிவரஞ்சினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனபாலசிங்கம், நஞ்சனா, சசிகலா(பிரான்ஸ்), சண்முகநாதன் (பிரான்ஸ்), பிரகலாதன் பார்த்தீபன்(பிரான்ஸ்), சுகந்தி(சுவிஸ்), மணிவண்ணன், மணிமாறன் ஆகியோரின் மைத்துனரும் பிரணவன், பிரவின், பிரதுக்ஷன், ஜெசிந்தன்(பிரான்ஸ்), ஜெனுஷன்(பிரான்ஸ்), சஞ்ஜேப்(பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தகப்பனும் டினோஜன்(பிரான்ஸ்), கனோஷன், லக்ஷிகா, வினோக்ஷிகா, துளசிகன், சந்தோஸ், அரிஸ்(பிரான்ஸ்), ஜெனனி(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.07.2015 திங்கட்கிழமை பிரான்சில் நடைபெற்று 2.00 மணியளவில் தகனக்கிரியை இடம்பெறும்.

துக்க நிகழ்வுகள் இவரது பெற்றோரின் இல்லமான சண்டிலிப்பாயில் அன்றையதினம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

(63098)

தகவல் :-
பரமநாதன், அன்னம்மா
021 225 5981

## கண்ணீர் அஞ்சலி

### இராசலிங்கம் நந்தகுமார்



எமது நிறுவனத்தில் பணி புரியும் **சிவானந்தம் சிவகுமாரின்** அன்பு மைத்துனரான **இராசலிங்கம் நந்தகுமார்** அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருறுவதுடன் அவரது குடும்பத் தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

சாரங்கா நகைமாடம்
உரிமையாளரும், ஊழியர்களும்.
157/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C 17994)

### பணியாளர்தேவை
தமிழ் ரைப்பிங் தெரிந்த பெண் ஒருவர் தேவை சாவகச்சேரியை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
(c 17854) (3,5,6,7) தொடர்பு: 077 775 0318

### வீடு வாடகைக்கு
யாழ்/ சுண்டுக்குளி சோமசுந்தரம் அவென்யூவில் 5 பெரிய அறை, ஹோல், சமையலறை, குளியலறை, கழிவறை, தனியார் நிறுவனங்களுக்கோ குடும்பத்தின ருக்கோ ஏற்ற வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 5110620 ,0776256183

### விற்பனைக்கு
வடமராட்சி தெற்கு (கரவெட்டி), கரவெட்டி வதிரிகுறிச்சி கடைவேலி பரிஷ்'' சண்முகத்தான் தோட்டம் பெரிய தோட்டம் '' 2.6 பரப்பு விற்பனைக்கு உண்டு.
(c 17854) (3,5,6,7) தொடர்பு: 077 771 2811

### தேவை
கிளிநொச்சியில் அலுவலக வேலைகளுக்கும் ஆண்பிள்ளைகளை மேற்பார்வை செய்வதற்கும் ஆங்கில மற்றும் கணினி அறிவுள்ள நடுத்தரவயதுப் பெண் ஒருவர் தேவை. 35 வயதிற்கு மேல் விரும்பத்தக்கது . உணவு தங்குமிடம் இலவசம் E.P.F, E.T.F உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0776128755
077 1543483 (57180) (3,5,6,7)

### தேவை
Toyata 121 model Car
தேவை.
(c 17986) (3,5,6,7) தொடர்பு: 077 6701 233

### வேலை வாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு A/L 03 பாடம் சித்தியடைந்த ஆண், பெண் இருபாலாரும் தேவை.
தொடர்பு: 077 252 4339(ஹரிஸ்)

### வாடகைக்கு
நல்லூர்ப் பகுதியில் அரசபணிபுரியும் பெண்களிற்கு மாத்திரம் சமையலறை வசதியுடன் அறைகள் வாடகைக்குண்டு.
(63085) (3,9,8) தொடர்பு: 076 708 2370

### தையல்
இந்தியாவில் 8 வருட அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறி பிளவுஸ், சுடிதார், நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும்.
இடம்: குமாரசாமி வீதி (யாழ். பல்கலைக்கழகம் அருகில்)
(63029) (10,6) 0766399277

### German Institute
German, Swiss, Austira நாடுகளுக்கான Deutsch மொழி வகுப்புக்கள் தமிழ்மொழிபெயர்புடன் நடைபெறுகின்றது. அடுத்த பிரிவுகள் 20.07.15 ஆரம்பம்.
Mrs. P.Kajenthini
10, Palaly Road, Jaffna.
(63094) (20,6) T.P: 077 160 4823

### வீடு வாடகைக்குத் தேவை
யாழ்ப்பாணம், கொக்குவில், நல்லூர் பிரதேசங்களில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 005 1796
(63085) (3,9,8) 076 541 0737


### வீடு விற்பனைக்கு
இராமநாதன் கலட்டி கோண்டாவில் றோட், இருபாலையில் 2 பரப்பு காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடும், மிக்சர் கொம்பனியுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 504 1730

### விற்பனைக்கு
பழையகால பெரிய, சிறிய, பித்தளை, செப்புக் கிடாரங்கள், கண்ணாடிக் கதவுகள் (அலுமினியம்) கலர் பிறிண்டர், பில்போடும் (Dotmatrix) பிறிண்டர், CCTV கமராக்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 078 521 0573

### வீடு வாடகைக்கு
யாழ் இந்துக் கல்லூரிக்கு முன்பாக வீடு வாடகைக்குண்டு. குடும்பத்துக்கும், நிறுவனத்துக்கும் ஏற்றது.
தொடர்பு:- 077 522 2533

### விற்பனைக்கு
40Kg நிறையுடைய கோதுமைத் தவிடு மொத்தமாகப்பெறுபவர்களுக்கு யாழ்ப்பாணத்தின் எப் பாகத்திற்கும் 890/= இற்கு உரிய இடத்திற்கு கொண்டுவந்து தரப்படும்.
குறிப்பு: கையிருப்பு உள்ளவரை மட்டுமே.
இல 416 K.K.S றோட் யாழ்ப்பாணம்.
தொடர்பு:- 071 856 5711

## கண்ணீர் அஞ்சலி
**சதாசிவம் கணேஸ்வரன் (நயினாதீவு)**
(B.A, PGD.Edu, M.Ed, SLPS II,
அதிபர், புங்குடுதீவு மகாவித்தியாலயம்.)



அன்னாரின் மரணச் செய்தியறிந்து தவியாய் தவிக்கின்றோம். எம்மோடு தோள் கொடுத்து நீர் செய்த பணிகளை நயினை மக்கள் மறந்துவிட மாட்டார்கள். அன்னாரின் பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் ஆத்ம சாந்திக்காய் நயினை அம்பாளின் பாதக் கமலத்தைப் பணிந்து நிற்கின்றோம்.

*கண்ணீர் துளிகளை காணிக்கையாக்கி நிற்கும்*

சோ.தில்லைநாதன் குடும்பம்
க.கதிரேசபிள்ளை குடும்பம்
இ.திரவியநாதன் குடும்பம்
பூ.சந்திரகுமார் குடும்பம்
வி.இராசநாயகம் குடும்பம்
கி. கிருபானந்தா குடும்பம்
இ. சிவபாதசேகரம் குடும்பம்
(63091) (10,6)

## 31 ஆம் நாள் நினைவலைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வும்



கடந்த 17.06.2015 புதன் கிழமை கனடாவில் இறைபதமடைந்த எமது குடும்பக்குல விளக்கு
**செல்வரத்தினம் சந்துருச்செல்வன்**
அன்னை மடியில் 01.02.1971
ஆண்டவன் அடியில் 17.06.2015

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் மதிய போசன நிகழ்வும் இன்று (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வீதி, 3ஆம் கட்டை, கல்வியங்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.
இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்றைய தினம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பருத்தித்துறை வீதி, 3ம் கட்டை,
கல்வியங்காடு.
குடும்பத்தினர்.

## ஆடிச் செவ்வாய் உற்சவத்தை முன்னிட்டு கடை ஏலம் கோரல்
**காலம்:** 19.07.2015 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** காலை 9.00 மணி
**இடம்:** தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய முன்றிலில்
**குறிப்பு:** கடை ஏலம் கேட்கும் உரிமையாளர்கள் ஏலம் கேட்கப்படும் தொகையினை அன்றைய தினத்தில் செலுத்தி கடையைப் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.
(63076) (46,3,6) இணைச் செயலாளர்.

### விவசாய காணி தேவை
யாழ் மாவட்டத்தில் காய்கறி விவசாயம் செய்வதற்கு இரண்டு ஏக்கர் விவசாய நிலம் குத்தகைக்கு உடனடியாக தேவைப்படுகிறது.
தொடர்புகளுக்கு: 071-5523089

### Beautician தேவை
கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் அழகுக் கலை நிலையத்திற்கு அழகுக் கலை நிபுணர் (Beautician) தேவை (பெண்). பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம் கிளிநொச்சி நகரப்பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சுயவிவரக் கோவையுடன் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரில் வரவும் .சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(63078) (3,5,6,7)
தொடர்பு: 077 553 9339

### தேவை
- ஜிப்சம் மோல்டிங் கொன்ராக்ரர்
- டைல் கொன்ராக்ரர்
- ரூப் லெவல் பாஸ்
- சுப்பவைசர்
- லேபர்ஸ்
- மேசன் பாஸ்

தொடர்பு:-
077 326 3512, 011 2362899

## அசத்தலான ஆடித் தள்ளுபடி




நாளை (20.07.2015) திங்கட்கிழமை தொடக்கம் ஆண்கள், பெண்கள், சிறுவர் மற்றும் அனைத்து ஆடை தினசுகளும் விசேட கழிவுகளில் விற்பனை செய்யப்படும்
**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
44, 42, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

## SMART IMPORTERS & DISTRIBUTORS (PVT) LTD
### பண்ணை முகாமையாளர் தேவை
- வன்னிப்பகுதியில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள பால் மற்றும் விவசாய பண்ணைக்கு முகாமையாளர் தேவை.
- இத்துறையில் ஆர்வமும், நிறைந்த அனுபவமும், நிர்வகிக்கும் தகுதியும் உடைய 40 தொடக்கம் 60 வயதுக்கு உட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்.
- தமிழ், ஆங்கில மொழியில் தேர்ச்சி அவசியம்.
- தங்குமிடவசதி உணவு தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
- முழு விவரத்துடன் யூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 5072 மே /பா உதயன்
(17882) (9,3,6) இல.361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்

## சரவணா ரெக்ஸ் SARAVANA TEX
நல்லூரில் மட்டும்தான் சரவணாரெக்ஸ் உள்ளது



நல்லூரில் மட்டும் தான் ஆடித்தள்ளுபடி
ஆகஸ்ட் 18 வரை
நீங்கள் ஒரு சாறி வாங்கும் பணத்துக்கு இரண்டு சாறி வாங்கலாம்
ஆடிசேல்
அதிஸ்டசேல்
526,529, பருத்தித்துறை வீதி.
நல்லூர் (சிவன் கோயிலுக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(C/17988) (10,6,3)

## PROJECT OFFICER – 1 POSITION (MALE / FEMALE)
Base station : Mullaitivu
Contract period: One Year (may be more)
PARCIC is looking for a suitable person as a Project Officer for Aqua Farming project in Mullaitivu.

**Essential Qualifications & Experience**
- Degree holder in Fisheries and Aqua Culture or studied in related this subject.
- Working experience in related of aqua farming activities.
- Good knowledge of project cycles, demonstrated experience in Monitoring and Evaluation.
- Good analytical skills and computer literacy in Microsoft Office.
- Strong interpersonal and liaison skills with the ability to network with diverse stakeholders.
- Good command of written and spoken English with fluency in Tamil.
- Ability to work independently using own initiative within the scope of responsibilities
- Ability and willingness to travel to all parts of the country.

**Please note:**
- Closing date for applications will be 26th July 2015
- The contract will be renewed depending on the project budget allocation as well as the applicant's working performance.
- Age limit 23 to 50 years.
- The position applied for should be indicated on the top of your application, on the top left hand corner of the envelope or in the subject line of the email.
- Please send in your application together with the names of two non-related referees to;

slproject1@parcic.org or
Regional Director,
PARCIC
No28, Temple Road, Jaffna.
021 222 7897


Only applicants selected for the interview will be contacted.

பாராளுமன்ற பொதுத்தேர்தல்-2015
வன்னி மாவட்டம்

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு

(இலங்கை தமிழ் அரசுக் கட்சி)


வன்னி மாவட்டம்




**சோரம் போகாத தலைமை**
**வன்னி மண்ணில்**
**இளைஞர்களின் நம்பிக்கை**
**வீட்டுச் சின்னத்துக்கும் 1,9 ஆகிய**
**இலக்கங்களுக்கும் வாக்களிப்போம்.**

-வன்னி மாவட்ட இளைஞர் கழகங்கள்-

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



4

## சுரேஷ் க.பிறேமச்சந்திரன்

X 4

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**

இராணுவ ஆக்கிரமிப்புக்களை அகற்றி
நிலையானதும்,உறுதியானதுமான
அரசியல் தீர்வைப் பெற்றிட...

**வீட்டுச் சின்னத்திற்கும் இலக்கம்**
**4 இற்கும் வாக்களியுங்கள்**

## இனிமேல் அலைச்சல் இல்லை

jaffnaholidays



இரண்டு பேருக்கு
மேற்பட்டோர் எனின் நாமே
வீடு வந்து உங்கள்
ஆவணங்கள் சரிபார்த்து
வெளிநாடு செல்வதற்கான
விமானப்பயணச்சீட்டு
மற்றும் பல வசதிகளை
ஒழுங்குபடுத்தித் தருகிறோம்.

Air Tickets / Visa Services
Holiday Pack / Travel Insurance
Travel Itinerary

இந்தியா செல்லும்
வெளிநாட்டவர்களுக்கு
ETA VISA பெற்றுக்
கொடுக்கப்படும்

Jaffna Holidays
Travels & Tours

320/B, Point Pedro Road, Aanapanthi, Jaffna
www.jaffnaholidays.lk

Jaffna Office : 021 222 4665 / 077 340 1770 Chankanai : 076 847 2458
Chavakachcheri : 077 892 2401 Nelliady : 077 698 1926
Kilinochchi, Mullaithivu & Mannar : 077 220 8344

**வீட்டில் இருந்தவாறே வருமானம் ஈட்டும் வழி...**
**அழையுங்கள் : 077 340 1770**


சாதாரண கணனி அறிவு அவசியம்

## நாடாளுமன்றத் தேர்தல்

2015

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

நிலப்பறிப்பு
சட்டவிரோத தடுப்பு
இயற்கை வள சுரண்டல்
அநிதி கண்டு நீதிமன்றில்
கால் நூற்றாண்டாய்
ஒலித்த குரல்
சர்வதேச குற்றத்துக்காய்
நீதிவேண்டி ஐ.நா வரை
சென்ற குரல்
தமிழ் மக்களின்
விடிவுக்காய்
என்றும் ஒலிக்கும் குரல்



# சுமந்திரன்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், சிரேஷ்ட சட்டத்தரணி)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

X TNA Tamil National Alliance தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3X

2015 ஜூலை 19 ஞாயிற்றுக்கிழமை உதயன்




ashok STEEL

நீடித்த வலிமை

# அசோக் TMT

## அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கு அறிமுகஞ்செய்கின்றோம் அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT இரும்புக் கம்பிகள். தலைமுறைகள் தாண்டி நீடித்து நிலைத்து நிற்க உங்கள் வீடுகளுக்கும் அசோக் TMT இரும்புக் கம்பிகளை உபயோகித்து, முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.112,500 + VAT

வட கிழக்கு மாகாணம் - 077 3781397, மேல் மாகாணம் - 077 3263518, மத்திய மாகாணம் - 077 3825832, வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு – 011 7388940-3

SLS 375

Grant McCann





5ஆம் தர புலமைப்பரிசில் HNB திரி தரு புலமைப்பரிசில்கள் 500

HNB சிங்கிதி சிறுவர்

## சிறுவரை சக்திமிக்கவராக்குவோம்

இன்று உங்கள் பிள்ளைகளுக்காக சேமிப்பது நாளை அவர்களுக்கான உந்து சக்தியாக அமையும். அந்த சேமிப்பானது எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும். உங்கள் சேமிப்பின் பிரதிபலனாகவே இது கிடைக்கவிருக்கின்றது. 5ஆம் தர புலமைப்பரிசிலில் சிறப்பு சித்தி பெறும் சிங்கிதி சிறுவர் சேமிப்பு கணக்கின் வாடிக்கையாளர்களுக்கு 500 HNB திரி தரு புலமைப்பரிசில்கள் கிடைக்கவிருக்கின்றன.

HNB சிங்கிதி சிறுவர் கணக்கில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு முன்னதாக ரூ.10,000 ஐ பேணிவருதன் மூலம் மாணவன் / மாணவியை HNB திரி தரு புலமைப் பரிசிலை பெறுவதற்கு தகுதியுடையவராக்குங்கள்.

| பிரிவு | பரிசில்களின் பெறுமதி [illegible] |
|---|---|
| மாவட்டத்தில் சிறந்த இருபது பேர் | ரூ.20,000/- |
| நாடளாவிய ரீதியல் 1 ஆம் இடம் வகிப்பவர் | ரூ.300,000/- |
| நாடளாவிய ரீதியல் 2 ஆம் இடம் வகிப்பவர் | ரூ.200,000/- |
| நாடளாவிய ரீதியல் 3 ஆம் இடம் வகிப்பவர் | ரூ.100,000/- |

HNB திரிதரு புலமைப்பரிசில் தேசத்து சிறார்களின் பலம்

எம்மை பின்தொடருங்கள் f

மேலதிக தகவல்களுக்கு: 011 2 661 983 / 59

HNB தலைமை அலுவலகம்,
HNB டவர்ஸ், 479, ரி. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10.
மின்னஞ்சல்: depmobilize@hnb.lk இணையத்தளம்: www.hnb.net

ஃபிச் ரேட்டிங்: AA-(lka)

ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும்.
Hatton National Bank PLC – PQ 82

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது


HNB

HNB உங்கள் முன்னேற்றத்தில் பங்காளி

HOLMES POLLARD & STOTT

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 226

# உலகை அச்சுறுத்தும் $H_1N_1$ இன்புளுவென்சா



இன்று மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்பியுள்ள $H_1N_1$ இன்புளுவென்சா (Influenza) பற்றிப் பல சந்தேகங்கள் உங்களுக்குத் தோன்றியிருக்கும். $H_1N_1$ என்றால் என்ன? திடீர் என்று இந்தக் காய்ச்சல் எங்கிருந்து வந்தது? போன்ற கேள்விகள் உங்கள் மனதில் தோன்றியிருக்கும்.

**$H_1N_1$ இன்புளுவென்சா என்றால் என்ன?**

இன்புளுவென்சா(Influenza) என்பது ஒரு வைரஸினால் ஏற்படும் காய்ச்சல் ஆகும். இதனை சாதாரணமாக flu அல்லது சளிக்காய்ச்சல் என அழைப்பார்கள். இது இன்று நேற்றல்ல மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே மனிதனைத் தாக்கி வரும் ஒரு வைரஸ் ஆகும். இது மனிதரை மட்டுமன்றி பறவைகள், பன்றி போன்ற விலங்குகளையும் தாக்குகின்றது.

இன்புளுவென்சா ஒவ்வொரு வருடமும் உலகம் முழுவதும் ஐந்து மில்லியன் பேர்களில் தீவிரமான காய்ச்சலை உண்டாக்குகிறது.வருடம்தோறும் இரண்டரை தொடக்கம் ஐந்து லட்சம் பேர் வரை இந்த நோயினால் இறக்கின்றார்கள்.

இன்புளுவென்சா வைரஸில் A,B,C என மூன்று வகைகள் உள்ளன. இவற்றுள் இன்புளுவென்சா A தான் வீரியம் கூடியது. இந்த வகைதான் இடையிடையே உலகம்முழுவதையும் தாக்கி பல உயிரிழப்புக்களை ஏற்படுத்துகின்றது.. (Pandemics) இந்த வைரஸின் மேற்பரப்பிலுள்ள இரு பிரதானமான புரதங்கள் ஆவன Hஎன அழைக்கப்படும் Haumaglutinm மற்றும் N எனப்படும் Neurominidase ஆகும். H இல் 16 வகைகளும் N இல் 9 வகைகளும் உள்ளன. இந்த வகைகளுக்கேற்ப வைரஸ்களை இலக்கமிட்டு அழைப்பார்கள். $H_1N_1$ என்பது தற்போது பரவிவரும் வைரஸ் ஆகும். 2004 ஆம் ஆண்டு பரவத்தொடங்கிய பறவைக்காய்ச்சல் $H_5N_1$ என அழைக்கப்பட்டது.

**இன்புளுவென்சா வைரஸ் எவ்வாறு காலத்துக்காலம் வேறுபடுகின்றது?**

எமது உடலிலுள்ள நிர்பீடனத் தொகுதி இன்புளுவென்சா வைரஸ் கிருமிக்கெதிராக எதிர்ப்புச் சக்தியை உருவாக்கும். ஆனால் வைரஸ்தனது மேற்பரப்பிலுள்ள புரதங்களை மாற்றுவதன் மூலம் நோயெதிர்ப்புச் சக்தியிலிருந்து தப்பி காலத்துக்குக் காலம் மக்களிடையே நோயை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான இன்புளுவென்சா காய்ச்சல் ஒவ்வொரு வருடமும் ஏற்படுகின்றது. குளிர் வலய நாடுகளில் குளிர்காலத்தில் (Winter)காய்ச்சல் பொதுவாகப் பரவுகிறது. இலங்கை, இந்தியா போன்ற வெப்பவலய நாடுகளில் வருடம் முழுவதும் நோய்த்தொற்றல் ஏற்படுகின் றது. சிலவேளைகளில் பறவைகள், விலங்குகளில் நோயை ஏற்படுத்தும் வைரஸ்களும், மனிதரில் நோயை ஏற்படுத்தும் வைரஸ்களும் இணைந்து அதிக வீரியமுள்ள நோய் எதிர்ப்புச் சக்திக்குக் கட்டுப்படாத புதிய வகை வைரஸை உருவாக்கி விடும். (Novel Virus) உலகம் முழுவதும் இந்த வைரஸ் பரவி பெரிய உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தும். (Pandemics) இவ்வாறான பெரிய உயிரழிவுகள் சென்ற நூற்றாண்டில் 3 தடவைகள் ஏற்பட்டன.

1918 ஆம் ஆண்டு Spanish Influenza எனும் பெரிய Pandemic ஏற்பட்டு உலகம் முழுவதும் சுமார் 2 கோடிப் பேர் உயிரிழந்தார்கள். இது $H_1N_1$ வகை வைரஸால் ஏற்பட்டது.

1958 ஆம் ஆண்டு Asian Influenza($H_2N_2$) இனால் சுமார் 10 லட்சம் பேர் உயிரிழந்தனர். அதேபோல் 1968 ஆம் ஆண்டு Hongkong Influenza வினாலும் 10 லட்சம் பேர் உயிரிழந்தனர். ($H_3N_2$) இந்த நூற்றாண்டில் 2004 ஆம் ஆண்டு Bird flu ($H_5N_1$) ஏற்பட்டது. 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 வரை Influenza A $H_1N_1$ எனப்படும் swine flu பரவியது.

**இன்புளுவென்சா எவ்வாறு பரவுகின்றது?**

நோயாளி ஒருவர் தும்மும் போதும், இருமும்போதும் சிறு துளிகள் காற்றில் பரவி அருகிலுள்ளோரின் சுவாசப்பாதை வழியாகத் தொற்று ஏற்படுகின்றது. நோயாளியையோ அவர் பயன்படுத்திய பொருள்களையோ தொட்டுவிட்டு கண், வாய், மூக்கு போன்ற பகுதிகளைத் தொடும் போது பரவலாம். நோயாளி தொட்ட ஆளிகள் (Switch) கதவுக் குமிழ்கள் மற்றும் காசு போன்றவை மூலமும் பரவ லாம்.பிளாஸ்ரிக்,தகரம் போன்றவற்றில் ஒன்று முதல் இரண்டு நாள்கள் வரை வைரஸ் கிருமிகள் உயிர்வாழும். ஒருவர் நோய்த்தொற்று ஏற் பட்டு ஒன்று முதல் ஐந்து நாள்கள் வரை நோயைப் பரப்பக்கூடிய தன்மை உடைய வராகக்காணப்படுவார்.

**இன்புளுவென்சா நோயின் அறிகுறிகள் என்ன?**

நோய்த் தொற்று ஏற்பட்டவர் 2 நாள்களில் அறிகுறிகளை வெளிக்காட்டுவார். காய்ச்சல், இருமல், தொண்டைநோ, மூக்கடைப்பு, மூக்கிலிருந்து நீர் சிந்துதல், தலையிடி, தசைநோ, மூட்டுநோ, களைப்பு போன்றவை பொதுவான அறிகுறிகள்.

பசியின்மை, வாந்தி போன்றவையும் ஏற்படலாம். மூச்சு விடச் சிரமப்படுதல், அறிவு மயங்குதல் போன்றவை அபாயகரமான நிலைமைகளாகும்.

**இன்புளுவென்சாவினால் அதிகம் பாதிப்படைபவர்கள் யார்?**

இன்புளுவென்சா ஆரோக்கியமான இளைஞர், யுவதிகளில் சாதாரண காய்ச்சலையே ஏற்படுத்தும். 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், சலரோக நோயாளிகள், இருதய, நுரையீரல் சம்பந்தமான நோயாளிகள், சிறுநீரக, ஈரல் நோயாளிகள், சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சை செய்து கொண்டவர்கள், நீண்ட காலம் ஸ்பீரோய்ட் (Sterords) மருந்துகளை எடுப்பவர்கள் இந்த நோயினால் கடுமையாகப் பாதிக்கப்படுவதுடன் மரணமடையக்கூடிய சந்தர்ப்பமும் ஏற்படலாம்.

**இன்புளுவென்சா நோய் வராமல் தடுக்கும் வழிகள் எவை?**

நோய்வாய்ப்பட்டவர்கள் சில வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் அது மற்றவர்களுக்குத் தொற்றாமல் பாதுகாக்கலாம். தும்மும்போதும், இருமும் போதும் கைக்குட்டையையோ, ரிசுப்பேப்பரையோ உபயோகித்து முகத்தை மூடவேண்டும். பயன்படுத்திய கைக்குட்டைகளை சவர்க்காரமிட்ட நீரில் துவைக்க வேண்டும். கண்ட கண்ட இடங்களில் துப்புவதைத் தவிர்க்க வேண்டும். அத்துடன் நோய்வாய்ப்பட்டவர்கள் சனக் கூட்டங்களுள் செல்வதையும் பொதுப்போக்குவரத்துச் சாதனங்களைப் பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும். நோய்வாய்ப்பட்டவர்களும் அவர்களைப் பராமரிப்பவர்களும் முகக் கவசம் (Facemask) அணிவதன் மூலமும் ஓரளவு நோய்த் தொற்றலைத் தடுக்க முடியும். கைகளை அடிக்கடி சவர்க்கார மிட்டுக் கழுவுவதன் மூலமும் கண், வாய், மூக்குப் பகுதிகளை அனாவசியமாக தொடுவதைத் தவிர்ப்பதன் மூலமும் நோய் பரவலைக் கட்டுப்படுத்தலாம்.

நோயாளி பயன்படுத்திய பொருள்களை சவர்க்காரம் மூலமோ அல்லது ஸ்பிரிட் (Sprit) மூலமோ சுத்தப்படுத்தலாம். புகைப்பிடிப்பவர்களை இந்த நோய் அதிகம் தாக்கும் என்பதால் புகைத்தலைத் தவிர்ப்பது நல்லது. மேலைத்தேய நாடுகளில் ஒவ்வொரு வருடமும் இன்புளுவென்சாவுக்கு எதிரான தடுப்பூசியை அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களுக்குக் கொடுப்பார்கள். ஆனால் இந்த நடைமுறை நமது நாட்டில் இல்லாதது கவலைப்பட வேண்டிய விடயமாகும்.

**நோய்வாய்பட்டவர்களுக்கான சிகிச்சைகள் எவை?**

நோய்வாய்ப்பட்டவர்கள் நல்ல ஓய்வு எடுக்கவேண்டும். சூப், கஞ்சி, இளநீர் போன்ற பானங்களை அதிகளவு பருக வேண்டும். வலி, காய்ச்சல் இருப்பின் பனடோல் வில்லைகளை வைத்திய ஆலோசனையுடன் எடுக்கலாம். கர்ப்பிணிப் பெண்கள் உட்பட அதிக பாதிப்படையக் கூடியவர்கள் உடனடியாக வைத்திய ஆலோசனையுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட வேண்டும். மூச்சு விடச் சிரமப்படுபவர்களும், வாந்தியினால் பானங்களை அருந்த முடியாமலிருப்பவர்களும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட வேண்டும். அரச வைத்தியசாலைகளில் இன்புளுவென்சாவுக்கான விசேட மருந்து உள்ளது. இது அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கும், நிமோனியா உள்ளவர்களுக்கும் வழங்கப்படு கின்றது.

நிறைவாக, இன்புளுவென்சா என்பது மனித வரலாற்றுடன் பின்னிப்பிணைந்த ஒரு நீண்ட கால நோய். பெரும்பாலானவர்களில் சாதாரண காய்ச்சலையே ஏற்படுத்தும். ஆனால் சிலரில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தி மரணத்தையும் ஏற்படுத்தலாம். சரியான தடுப்பு முறைகளைப் பயன்படுத்துவதன் மூலமும், உரிய காலத்தில் சிகிச்சை பெறுவதன் மூலமும் உயிரிழப் புக்களை தவிர்த்துக் கொள்ள லாம்.

**வைத்தியர்
எஸ். கேதீஸ்வரன்,
பொது வைத்திய நிபுணர்,
விடுதி இல. 9&3,
யாழ். போதனா
வைக்சியசாலை.**



நோய்வாய்ப்பட்டவர்களும் அவர்களைப் பராமரிப்பவர்களும் Facemask அணிவதன் மூலமும் ஓரளவு நோய்த்தொற்றலைத் தடுக்க முடியும். கைகளை அடிக்கடி சவர்க்கார மிட்டுக் கழுவுவதன் மூலமும் கண், வாய், மூக்குப் பகுதிகளை அனாவ சியமாக தொடுவதைத் தவிர்ப்பதன் மூலமும் நோய் பரவலைக் கட்டுப்படுத்தலாம்.

# சீனாவின் கடன்களை ரத்துச்செய்யவில்லை

**அரசு தெரிவிப்பு**



கொழும்பு, ஜூலை 18

சீனாவிடம் பெறப்பட்ட கடன்களை ரத்துச் செய்யும் திட்டம் எதுவும் இலங்கை அரசுக்கு கிடையாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன,

சீனாவிடம் பெறப்பட்ட கடன்களை ரத்துச் செய்யும் திட்டம் எதுவும் இலங்கை அரசுக்கு கிடையாது. இந்தக் கடன்கள் நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானவை.

சீனக் கடன்கள் தொடர்பான விதிமுறைகள் தொடர்பாக மீள் இணக்கப்பாடு செய்து கொள்கிறோமே தவிர, இந்தக் கடன்களில் இருந்து விடுபடும் திட்டம் ஏதும் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சீனாவிடம் கூடுதல் வட்டியில் பெறப்பட்ட கடன்களை அடைப்பதற்கு, அரசு, ஏனைய நாடுகளிடம் கடன் வாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றிடம் இருந்தே, சீனாவின் கடன்களை அடைப்பதற்கான குறைந்த வட்டியிலான நீண்டகாலக் கடன்களைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாக நிதி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த)

# அளுத்கம கலவரத்துக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும்

## சமூக அமைப்புக்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூலை, 19

கடந்த ஆண்டு ஜூன் மாதம் அளுத்கம பிரதேசத்தில் நடைபெற்ற இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு இதுவரை வழங்கப்படாத நஷ்டஈட்டை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு விசேட கவனம் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கை முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்கா மற்றும் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மக்களால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இராணுவத்தின் மேற்குப் பிராந்திய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உபய மெதவெலவின் பங்குபற்றலுடன் அளுத்கம அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் அண்மையில் தெஹிவளையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவரான என்.எம்.அமீன் இந்த வேண்டுகோளை முன்வைத்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் –

கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் இந்நாட்டு மக்கள் மிகவும் பீதியோடு வாழ்ந்தார்கள். அளுத்கமவில் நடைபெற்ற காரணமாக முஸ்லிம்களுக்கு பெரும் அழிவு ஏற்பட்டது. குறுகிய காலத்துக்குள் சேதத்துக்குள்ளான வீடுகளையும், கடைகளையும் நிர்மாணித் துக் கொடுப்பதற்கு இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை பாராட்டுக்குரியது.

மேஜர் ஜெனரல் உபய மெதவெல தலைமையில் இப்பணிகள் சிறப்பாக நடைபெற்றன. அதற்காக நாம் அவருக்கு முஸ்லிம் சமூகத்தின் சார்பாக நன்றியைத் தெரி வித்துக் கொள்கின்றோம். ஆனால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு இதுவரை நஷ்டஈடு வழங்கப்படவில்லை. இது குறித்து நீதி அமைச்சர் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கை இராணுவத்திலும், பொலிஸ் படையிலும் மிகக் குறைவான முஸ்லிம்களே இருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் இராணுவத்தில் பணிபுரிந்த முஸ்லிம்களை சிறப்பாக தமது பங்களிப்பைச் செய்தார்கள். மேஜர் லாபிர், மேஜர் முத்தலிப் போன்ற பல முஸ்லிம்கள் போர்க் களத்தில் நாட்டுக்காக இரத்தத்தைச் சிந்தியிருக்கிறார்கள். இப்போது படைகளிலோ, பொலிஸ் சேவையிலோ குறைந்த முஸ்லிம்களே இருக்கிறார்கள்.

இந்நிலையை மாற்ற விசேட நடவடிக்கை எடுக்க வேண்டும். கொழும்பு தெற்கில் முஸ்லிம் பிள்ளைகளுக்கு கல்வி புகட்டுவதற்கு ஒரு பாடசாலை இல்லை. முஸ்லிம்கள் தம் பிள்ளைகளை சிங்களப் பாடசாலைகளில் சேர்க்க முற்பட்டாலும் அதற்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. கொழும்பு மத்தியிலிருந்து பாணந்துறை வரை ஒரு ஆண் பாடசாலை இல்லை. இக்குறையை நிவர்த்தி செய்ய அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்– என்றார். (த–10)

# மத நிகழ்வுகளில் தேர்தல் பரப்புரை

**'கபே' கண்டனம்**

இஸ்லாமிய மத நிகழ்வுகளை சிலர் தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்தி வருவது கவலை அளிப்பதாக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் 'கபே' தெரிவித்துள்ளது.

முஸ்லிம் மத நிகழ்வுகளை முன்வைத்து சிலர் பொருள்கள் விநியோகித்து அரசியல் பரப்புரையில் ஈடுபடுவது குறித்து தகவல் கிடைத்துள்ளதென 'கபே' இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை – தேர்தல் வன்முறைகள் குறித்து இதுவரை 261 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–10)










# 150 ஆண்டுகளாக வாள் ஏந்திய நிலையில் குருநகரை குதிரையில் வலம் வந்து காத்துவரும் புனித யாகப்பர்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்

**குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் பெருவிழா ஜூலை மாதம் 25 ஆம் திகதி கோலாகலமாக கொண்டாடப்படுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**






**யாழ்.** நகரின் பிரதான வீதியில் உரோமாபுரியில் உள்ள புனித பேதுருவானவர் தேவாலயத்தின் தோற்றம் கொண்ட குருநகர் புனித யாகப்பர் ஆலயம் கம்பீரமாக தலைநிமிர்ந்து நிற்கிறது. 232 அடி நீளமும் 82 அடி அகலமும் கொண்ட ஆலயத்தின் நடுவே கிராதியில் தொடங்கி ஆலயத்தின் முன்பக்கம் நோக்கிய வாசல் வரை இரு மருங்காகச் சொல்லும் 12 ஜோடித் தூண்களும் அரச மாளிகைகளில் காணப்படும் தூண்களைப்போல காட்சி அளிக்கின்றது. ஆலயத்தின் இருபுற அகன்ற விறாந்தைகளும் அதனோடு கூட அமைக்கப்பட்ட அழகிய வேலைப்பாடுகள் அமைந்த தூண்களும்திரும்பவும்ஒருஅரசபார்வையையே ஆலயத்துக்கு வழங்குகின்றது.

யாழ்ப்பாணத்தின் - கரையூர் - என்ற காரணப் பெயரால் அழைக்கப்பட்ட குருநகரில் குடியேறியதாகக் கருதப்படும் குருகுல மக்களின் வாழ்விடமே குருநகர் ஆகும்.

வேதாகமத்தில் யாக்கோபு என்றும் குருநகர் மக்களால் சந்தியோகுமையோர் - யாகப்பர் - யக்கோ - படையாளி என்றும் அழைக்கப்படும் யேசுவின் ஒன்றுவிட்ட சகோதரரான புனித பெரிய யாகப்பரே குருநகர் பங்கின் பாதுகாவலர் ஆவார். 1965 ஆம் ஆண்டு சந்தியோகுமையோர் என்ற பெயர் புனித யாகப்பர் என மாற்றப்பட்டது.

இவ் ஆக்கத்துக்கான தகவல்கள் குருநகர் புனித யாகப்பர் ஆலயம் 150 ஆவது ஆண்டு நிறைவு மலர் மற்றும் இணைப்பு இதழ் ஆகியவற்றில் இருந்தும் - பங்குத் தந்தை ஆர்.சி.எக்ஸ்.நேசராஜா அடிகளாரின் நேரடி உரையாடலில் இருந்தும் பெறப்பட்டவை.

1850 இல் யாழ்ப்பாணம் வந்து இறங்கிய லெயோ மொறுவா அமதி அடிகளார் யாழ் மேற்றாசனக் கட்டளைக் குருவாகவும் பின்னர் குரு முதல்வராகவும் பணியாற்றியுள்ளார். இக்காலப்பகுதியில் சந்தியோகுமையோர் சிற்றாலயத்தின் வழி மீசாமாகவும் கடமையாற்றியுள்ளார்.

லெயோ மொறுவா அமதி அடிகளாரின் காலத்தில் (1861 – 1896) இப்போது தோற்றமளிக்கின்ற கரையூர் சந்தியோகுமையோர் ஆலயத்துக்கான அடிக்கல் 25 ஆடி 1861 இல் புனிதரின் திருநாள் அன்று நடப்பட்டு ஊர் மக்களின் உழைப்பால் கட்டப்பட்டது. 1896 ஆம் ஆண்டு அவர் இறக்கும் வரை கட்டட வேலைகளை மேற்பார்வை செய்துள்ளார் என சந்தியோகுமையோர் அப்போஸ்தலர் ஆலயத்தின் நூற்றாண்டு நினைவு மலரில் (1961 பக்கம் 15) இல் அறியவருகின்றது.

குருநகர் புனித யாகப்பர் ஆலய அடிக்கல்லை நட்டு கட்டிமுடித்த லெயோ மொறுவா அடிகளார் குருமுதல்வராகவும் இருந்தபோது பாதுகாவலனில் எழுதிய ஒரு கட்டுரை தொடர்பாக இந்துசாசன பத்திரிகை ஆசிரியர் லெயோ மொறுவா அடிகளாருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார்.

லெயோ மொறுவா அடிகளாருக்கு சார்பாக வழக்கு தீர்க்கப்பட்டு அவர் கோட்டையை விட்டு வெளியேறியவுடன் குருநகர் இளைஞர்கள் அவரைத்தூக்கி கொண்டுவந்து சந்தியோகு குருமனையில் சேர்த்தார்கள் என 27-12-1932 இல் நடைபெற்ற குருத்துவ திருநிலைப்படுத்தல் சடங்கில் அன்றைய யாழ். ஆயர் மேதகு யே.ஏ.கியோமர் ஆண்டகை தெரிவித்துள்ளார். இது அக்கால குருநகர் மக்கள் லெயோ மொறுவா அடிகளார் மீது காட்டிய அளவுகடந்த அன்பைக் காட்டுகிறது.

யாழ்.புனித மரியன்னை பேராலயத்துடன் இணைந்திருந்த புனித யாகப்பர் ஆலயம் 17-07-1892 இல் தனிப் பங்காக இயங்கத் தொடங்கிய போது யாழ். அடைக்கல அன்னை ஆலயமும் - குருநகர் புதுமை மாதா ஆலயமும் இணைக்கப்பட்டு ஒரு பங்காக ஆக்கப்பட்டது. 29-07-1909 இல் யாழ்.அடைக்கல அன்னை ஆலயம் தனியாகப் பிரிக்கப்பட்டது.

1892 இல் தனிப்பங்காக இயங்கத் தொடங்கிய போது வை.லே.கான் அமதி அடிகளார் முதலாவது பங்குக் குருவாகி 1895 வரை பணியாற்றினார். 1906 இல் பணியாற்றிய முதல் சுதேச குருவாகிய யோன் அலோசியஸ் அடிகளாரின் (16-03-1896 - 16-10-1908) யூபிலிக்கு பங்கு மக்களால் வழங்கப்பட்ட அன்பளிப்பைக் கொண்டு முதிரை மரத்தினாலான அழகிய நேர்த்தியான சற்பிரசாத கிராதி அமைக்கப்பட்டது.

03-10-1909 இல் பி.ஏ.மருசலீன் அடிகளாரின் பணிக்காலத்தில் ஆலய வளவினுள் அமைந்திருந்த திரு இருதயப் பாடசாலை பங்குத் தந்தையின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டது. பின்னர் இது சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

27-12-1932 இல் இப் பங்கைச் சேர்ந்த ஏ.ஜே.பி.அன்ரனைனஸ் அமதி (சிறந்த எழுத்தாளர்) மற்றும் அ.ஞானப்பிரகாசம் அமதி (சிறந்த பிரசங்கியார்) ஆகிய இருவரும் இப் பங்கின் முதல் குருக்களாக இவ் ஆலயத்திலே ஆயர் மேதகு யே.ஏ.கியோமர் ஆண்டகையால் திருநிலைப்படுத்தப்பட்டனர். 2010 ஆம் ஆண்டு வரை குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்கில் இருந்து 18 குருக்கள் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

18-12-1935 இல் பங்கின் முதல் கன்னியாஸ்திரியாக கபிரியேற்பிள்ளை சலோமைப்பிள்ளை என்பவர் மேரி லோயலா என்ற துறவறப் பெயருடன் திருக்குடும்பக் கன்னியர் சபையில் நித்திய வாக்குத்தத்தம் பெற்றார்.

2010 ஆம் ஆண்டு வரை 12 கன்னியர்கள் குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்கில் இருந்து தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் திருக்குடும்பக் கன்னியர் சபை - அப்போஸ்தலிக்க கார்மேல் சபை - திருச்சிலுவைக் கன்னியர் சபை ஆகிய சபைகளில் பணியாற்றியுள்ளனர்.

ஏ.சார்வே அமதி (03-07-1961-14-06-1966) அடிகளாரின் பணிக்காலத்தில் 25-07-1961 இல் புனித யாகப்பர் ஆலயத்தின் நூற்றாண்டு விழா மலர் வெளியீட்டுடன் கொண்டாடப்பட்டது. நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் போது யே.இ.ஜெயசீலன் அடிகளார் பங்கின் ஆறாவது குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

பெனட் கொன்சன்ரைன் அடிகளார் காலத்தில் (15-06-1966 – 29-03-1970) ஆலய செயற்பாடுகளில் இளைஞர்கள் உள்வாங்கிக் கொள்ளப்பட்டதோடு இரவு முழுவதும் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு நற்கருணைப் பக்தி வளர்க்கப்பட்டது. புனித யூதாததேயுவின் பக்தியும் புதிதாக வளர்க்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலேயே ஆலயங்களில் முதல் முறையாக தென்னிந்திய இசை பக்க வாத்தியங்களுடன் பாடல்களை இசைக்கச் செய்த பெருமை இவரையே சாரும்.

நீ.மரியசேவியர் அடிகளார் காலப்பகுதியில் (30-03-1970 – 09-06-1971) ஏற்கனவே உச்ச நிலையில் இருந்த நாடகக் கலை மெருகூட்டப்பட்டதோடு நாடக மன்றங்கள் மற்றும் பொது சேவை அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. இவரது உழைப்பின் நினைவுச் சின்னமாக குருநகர் கலையரங்கம் இன்றும் தலை நிமிர்ந்து நிற்கிறது.

ம.இ.பயஸ் அடிகளார் காலத்தில் (01-02-1973 – 09-09-1976) மருதமடு அன்னையின் திருச்சொரூபம் யாகப்பர் ஆலயத்தில் வரவேற்கப்பட்டதோடு ஒல்பன் இராஜசிங்கம் அமதி மற்றும் பயஸ் இருதயதாஸ் ஆகியோரின் குருத்துவ திருநிலைப்படுத்தல் சடங்குகள் நடைபெற்றன.

ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் காலத்தில் (20-04-1981 – 30-10-1981) குருநகர் யாகப்பர் ஆலய வளவில் வடமேற்கு மூலையில் இருந்த காணி கொள்வனவு செய்யப்பட்டு ஆலய முன்றிலில் அழகுற முழுமைப்படுத்தப்பட்டது. நீண்டகால முற்றுப்பெறாமல் இருந்த மணிக்கோபுரங்கள் இரண்டும் அதனோடு இணைந்த முன் மணி மண்டபமும் இவரின் காலத்தில் கட்டிமுடிக்கப்பட்டது.

பீற்றர் துரைரட்ணம் அடிகளாரின் பணிக்காலத்தில் (10-08-1982 – 25-08-1987) 20-02-1985 இல் ஆலயத்தின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள வியாகுலமாதா கெபி திறந்து வைக்கப்பட்டது. 125 ஆவது ஆண்டு விழா மலர் வெளியீட்டுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 10 ஜூன்மாதம் 1986 இல் மண் டைதீவுமுனைகடற்பகுதியில் படுகொலை செய்யப்பட்ட குருநகரைச் சேர்ந்த 31 தொழிலாளர்களின் மரண ஊர்வலத்தின் போது பீற்றர் துரைரட்ணம் அடிகளார் ஆலயத்தில் ஒழுங்கு செய்த பகிரங்க வழிபாடு அனைவரையும் கலங்கச் செய்தது.

பி.எம்.இம்மானுவேல் அடிகளாரின் பணிக்காலத்தில் (26-08-1987 – 09-08-1993) புனித வின்சன் டி போல் பெண்கள் பந்தி உருவாக்கப்பட்டது. மரண வீடுகளுக்கு பக்தி சபை பெண்கள் சென்று வழிபாடு நடத்துதல் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றுதல் என்பன இவர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. 1988 இல் புனித யாகப்பர் கலை மன்றத்தை உருவாக்கி நாட்டுக் கூத்துக்களையும் நாடகங்களையும் - பாசப்பலி என்னும் திருப்பாடுகளின் காட்சியையும் மேடையேற்றினார்.

ஆர்.எம்.ஜி.நேசநாயகம் அடிகளாரின் பணிக்காலத்தில் (10-08-1993 – 19-09-1997) 13 நவம்பர் 1993 இல் நூற்றாண்டுப் பழைமை வாய்ந்த குருநகர் புனித யாகப்பர் ஆலயம் சுப்ப சொனிக் விமானக் குண்டு வீச்சால் தாக்கப்பட்டது. ஆலயத்தில் செபித்துக்கொண்டிருந்த 9 பேர் உடல் சிதறி உயிரிழந்தார்கள். கோவில் கூரைகள் முற்றாகவும் கட்டடத்தின் கிழக்குப் பகுதி நொறுங்கியும் அதிர்வினால் கட்டடத்தின் பெரும்பகுதி சேதமடைந்தும் போயின.

அ.பி.ஜெயசேகரம் அடிகளாரின் பணிக்காலத்தில் (02-08-2001 – 26-07-2004) 1993 இல் நிகழ்ந்த விமானக் குண்டுத் தாக்குதலின் 10 ஆவது ஆண்டை நினைவுகூரும் விதமாக நினைவுச் சின்னமும் நினைவுக்கல்லும் நடப்பட்டது. அதில் இறந்தவர்களுக்கு வணக்கம் – இருப்பவர்களுக்கு எச்சரிக்கை என்ற வாசகம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டது. தவக்காலத்தின் ஐந்தாம் வாரத்தில் நாட்டில் சமாதானம் வேண்டி சிலுவைகளை தோள்மேல் ஏந்தி சிறுவர்கள் இளையோர் வயோதிபர் இணைந்து தீவகத்தில் உள்ள சாட்டி புனித சிந்தாத்திரை மாதா யாத்திரைத் தலத்தை நோக்கி பாத யாத்திரை செல்லுகின்ற முறையை அ.பி.ஜெயசேகரம் அடிகளார் ஆரம்பித்து வைத்தார். இது தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்படுகிறது.

ஆர்.எஸ்.சகாயநாயகம் அடிகளாரின் பணிக்காலத்தில் (15-10-2004 – 29-10-2008) குருநகர் புதுமை மாதா ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது. குருநகர் சுற்றாடலில் மது விற்பனை நிலையங்களை இல்லாதொழித்த பெருமை இவரையே சாரும்.

ஆர்.சி.எக்ஸ்.நேசராஜா அடிகளாரின் பணிக்காலத்தில் (01-11-2008 முதல் இன்று வரை) புனித யாகப்பர் ஆலயத்தின் 150 ஆவது ஆண்டு விழா (1861 – 2011) விழா மலர் மற்றும் விழா இணைப்பு இதழ் என்பவற்றின் வெளியீட்டுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்த 16 குருக்களின் துணையுடன் 80 நாள்கள் கொண்ட மகா ஞான ஒடுக்கம் 150 ஆவது ஆண்டுக்கு ஆயத்தமாக நடத்தப்பட்டது.

ஆலயத்துக்கு மாபிள் பதித்தமை – நற்கருணை ஆண்டவர் சிற்றாலயம் அமைத்தமை – கல்லறை ஆண்டவர் சொரூப விசேட பகுதி உருவாக்கியமை – ஆலய முன்றிலில் வாள் ஏந்திய யாகப்பரின் சொரூபம் நிறுவப்பட்டமை – ஆலயத்தை சூழவுள்ள வெளித் தரைப் பகுதிக்கு 20 அடி அகலத்தில் நிலக்கல் பதித்தமை – பங்கின் முக்கிய ஆண்டுகளின் கால அட்டவணையை ஆங்கிலத்தில் ஆலய சுவரில் பொறித்தமை என்பன இவரின் காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் ஆகும்.

போரின் பின்னர் கைவிடப்பட்டிருந்த சிறுத்தீவு யாத்திரைத்தலம் 11-02-2013 இல் திரும்பவும் விழாக் கொண்டாடத் தொடங்கியமை இவரின் காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் ஆகும்.

150 ஆண்டுகளாக குதிரையில் வாள் ஏந்திய நிலையில் குருநகரை வலம் வந்து பாதுகாத்துவரும் புனித யாகப்பர் தமிழ் மக்கள் தேர்தல் ஒன்றை எதிர்நோக்கி காத்திருக்கும் வேளையில் அனைவரையும் பாதுகாப்பாராக.


லீற்றரின் உச்சம்
Hero
ஹீரோ ஐ ஸ்மாட்
சாதிக்கக்கூடிய மைலேஜ்
கடந்த வாரத்தின் லீற்றரின் உச்ச சவாலில் ஒரு லீற்றரில் 80KM க்கு அதிகமாக சென்ற வாடிக்கையாளர்கள்
C.M.M. தஸ்லீர் பொத்துவில்
P.T. அம்சார் அம்பாறை
A.L.M. மாஹூம் பொத்துவில்
V.T. ஜெயசிங்க அம்பாறை
splendor
iSmart
It's Smart Thinking
ரூ. 204,990/-
சாதிக்கக்கூடிய மைலேஜிக்கு உங்கள் ஐ ஸ்மாட்டுடன் வாருங்கள்
1. ஜீலை 20 - ப்ரோட்வே மோட்டர்ஸ் - அக்கறைப்பற்று - காலை 9 மணி முதல்
2. ஜீலை 21 - ஹீரோ காட்சியறை - கல்முனை - காலை 9 மணி முதல்
3. ஜீலை 22 - ஏசியன் மோட்டர்ஸ் - கல்முனை - காலை 9 மணி முதல்
4. ஜீலை 23 - ப்ரோட்லைன் மோட்டர்ஸ் - நிந்தாவூர் - காலை 9 மணி முதல்
5. ஜீலை 25-ப்ரோட்வே மோட்டர்ஸ்/SUB - சம்மாந்துரை - காலை 9 மணி முதல்
011 5777000
Abans


கொரியாவின் தரம் நம்பகமானது
PRIME IS THE ULTIMATE!
LG PRIME UHD TV
ஒவ்வொரு வர்ணமும் உயிர்ப்பானவை
தொலைக்காட்சியில் நீங்கள் எதைப் பார்க்கிறீர்களோ அது நிஜ வாழ்க்கையில் பார்ப்பதை விட வித்தியாசமானதாக இருக்கக் கூடாது. LG PRIME UHD TV என்பது Nano spectrum technology & ultra luminance ஊடாக வர்ண மீள் உற்பத்தியுடன் 64bit Processor உள் அமைப்புடனான உலகின் முதலாவது தொலைக்காட்சியில் ஆகும்.
LG
Life's Good
இருப்புள்ளவரை மாத்திரமே
உடன் முன் பதிவுக்கு
தள்ளுபடி ரூ. 150,000
+ 10 pairs of 3D Glasses
+ Bell4G connection
ரூ.699,990
முன்கட்டளை விலை ரூ.549,990
55" PRIME UHD SC
LG65/55UF950T
ColourPrime
Nano spectrum technology ஊடாக LGயின் தனித்துவமான தொழில்நுட்பம் வர்ண மீள்உற்பத்தி தூரத்தை அகலமாக்குகிறது.
ULTRA Luminance
பிரகாச கட்டுப்பாட்டுடன் கண்ணைப்பறிக்கும் யதார்த்தமான உருவங்களை அனுபவியுங்கள்.
IPS 4K
உலக தரம் வாய்ந்த IPS 4Kயினால் எந்த இடத்திலிருந்தும் உயிர்ப்பான வர்ணங்களை பார்க்கவும்.
ULTRA Slim
எதிர்ப்பற்ற மெலிதான வடிவமைப்பில அடக்கப்பட்டுள்ள விறுவிறுப்பான படங்களால் வியப்படையுங்கள்.
WebOS 2.0
எளிதானதும் வேகமானதுமான எடுப்பானதுமான TVயை பார்த்து மகிழுங்கள்.
Abans
0115 999 000
முன் பதிவுகளுக்கு நாடு முழுவதிலுமுள்ள Abans Elite காட்சியறைகளில் சமர்ப்பிக்கலாம்

# டயர் பராமரிப்புச் சேவை தொடங்கியுள்ள சியெட்

இலங்கையில் மோட்டார் வாகனங்களைப் பாவிக்கின்றவர்கள் மத்தியில் சிறந்த டயர் பராமரிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒரு புதிய முன்னோடித் திட்டத்தை தொடங்கியுள்ளதாக இலங்கையின் டயர் தேவையில் அரைவாசியை பூர்த்தி செய்யும் சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டமாக 50 வர்த்தக நிறுவனங்களில் நட மாடும் டயர் பராமரிப்பு சேவைகள் இடம்பெறவுள்ளன. இதன் போது டயர்களின் வாயு அழுத்த அளவு உட்பட ஏனைய பல அம்சங்களும் பரிசீலிக்கப்படும். அத்தோடு டயர்கள் மூலம் கூடுதலான மைல்கள் தூரத்தை எவ்வாறு அடைய முடியும், நைதரசன் நிரப்பல், கூடிய பாதுகாப்பு என்பன பற்றி ஆலோசனைகளும் வழங்கப்படும் என்று கம்பனி அறிவித்துள்ளது.

'மோட்டார் வாகனக்காரர்கள் டயர்களை பெரிதாகக் கவனத்தில் கொள்வதில்லை. பாதுகாப்பு, வசதி, மற்றும் வாகனத்தின் பொறியில் பண்பு என்பனவற்றில் அவை வழங்கும் பங்களிப்பை அவர்கள் குறைவாக மதிப்பிடுகின்றனர்' என்று கூறினார் சியெட் களனி ஹோல்டிங்ஸின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் உப தலைவர் ரவி தத்லானி. 'இலங்கையில் ஆகக் கூடுதலாக விற்பனையாகும் டயர் என்ற வகையில் வாகன ஓட்டல் பற்றிய பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், எந்த வகையை சேர்ந்த டயர் ஆயினும் சரி அதில் ஆகக்கூடுதலான பயனை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது பற்றி அறிவூட்டுவதிலும் சியெட் தலைமை தாங்குகின்றது' என்று அவர் மேலும் கூறினார்.

'இந்த டயர் பராமரிப்பு சேவை மூலம் எமது சியெட் டயர்களை இதுவரை பாவித்திராத வாகன உரிமையாளர்களுக்கு சியெட் ரேடியல் டயர்களைப் பாவித்து அதன் தரத்தை தாமே உணர்ந்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பும் வழங்கப்படுகின்றது' என்று தத்லானி மேலும் கூறினார்.

இந்த புதிய திட்டத்தின் கீழ் விஷேடமாக உருவாக்கப்பட்ட டயர் பராமரிப்பு நடமாடும் பிரிவு, தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் உபகரணங் கள் சகிதம் ஒவ்வொரு வர்த்தக நிறுவனத்துக்கும் நேரடியாக வருகை தரும் இந்த வருகைகள் பற்றிகுறிப்பிட்டகம்பனிகளுக்குமுன் கூட்டியே அறிவிக்கப்படும்.

டயர்கள் பரிசீலிக்கப்படுவதற்கு மேலதிகமாக தேவைக்கு ஏற்ப ஏனைய சேவைகளும் வழங்கப்படும். அத்தோடு இலவசமாக நைதரசனும் நிரப்பிக் கொடுக்கப்படும். இது டயர்கள் மூலம் கூடிய மைல் தூரத்தை ஓடக் கூடிய நிலையை உருவாக்கும். அத்தோடு இதில் பங்கேற்கும் சகல வாடிக்கையாளர்களுக்கும் அடுத்த முறை சியெட் டயர்களை கொள்வனவு செய்கின்ற போது கழிவுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வவுச்சர்களும் வழங்கப்படும்.

இலங்கையின் டயர் சந்தையில் ரேடியல் டயர் வகைகளில் தலைமை தாங்கும் வர்த்தகமுத்திரை சியெட்டே ஆகும். அத்தோடு ஏனைய வகை வர்த்தக டயர்களிலும் தலைமைத்துவ நிலையை அது கொண்டுள்ளது. இவ்வாண்டு முற்பகுதியில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஆறு அளவுகளிலான விஷேட வகை டயர்களை சந்தையில் அறிமுகம் செய்தது. இவை கனரக சேவைகளுக்கும் கைத்தொழில் பிரயோகத்துக்கும் உரியவையாகும். (த)

# உலகைச் சென்றடையும் 'பிரைட்ஸ் ஒஃப் ஶ்ரீலங்கா'



இலங்கையின் முதல்தரமான திருமணம்சார் சஞ்சிகையாக திகழும் 'பிரைட்ஸ் ஒஃப் ஸ்ரீ லங்கா' ஆனது, உலகெங்குமுள்ள வாசகர்கள் பெற்று வாசிக்கக் கூடியவாறு தனது அடைவுமட்டத்தை அண்மையில் விஸ்தரித்துள்ளது. கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் பெருமளவில் கூடியிருந்த மதிப்பிற்குரிய விருந்தினர்கள் முன்னிலையில், அனைத்து விதமான அப்பிள் மற்றும் அன்ட்ரொயிட் கையடக்க தொலைபேசிகளுக்குமான தனது பிரயோக மென் பொருளை அறிமுகம் செய்து வைத்ததன் மூலமே மேற்படி சஞ்சிகை இவ் விஸ்தரிப்பை மேற்கொண்டுள்ளது.

இதன்மூலம் தனக்கே உரித்தான பிரயோக மென் பொருளை அறிமுகம் செய்யும் முதலாவது நவநாகரிக, திருமணம் சார் அத்துடன். கல்யாண சஞ்சிகை என்ற சாதனையை 'பிரைட்ஸ் ஒஃப் ஸ்ரீலங்கா' நிலைநாட்டியிருக் கின்றது. இச் சஞ்சிகையின் அச்சிடப்பட்ட பிரதியை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உலகின் எப்பாகத்திலேனும் வாழ்கின்ற எந்தவொரு திருமண ஜோடிக்கும் இந்த மென்பொருள் இப்போது கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது.

சஞ்சிகையின் ஆசிரியரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான நெலும் ஹத்ஹெல்லவுடன், இலங்கையின் திருமணம்சார் மற்றும் அழகுக்கலை துறையில் முன்னணியில் உள்ள இரு ஆளுமைகளான ரமணி பெர்னான்டோ மற்றும் ஹரிஸ் விஜயசிங்க ஆகியோரும் இணைந்து இந்த பிரயோக மென்பொருளை அறிமுகப் படுத்தி வைத்தனர். இச் சஞ்சிகை 2007 ஆம் ஆண்டு மே மாதம் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட போது தற்செயலாக அதனது முதற் பிரதியானது ரமணி பெர்னான்டோவுக்கே வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

'08 ஆண்டுகளுக்கு முன்னர் இச் சஞ்சிகையை அறிமுகம் செய்ததில் இருந்து இதுவரை 32 இதழ்களை நாம் பிரசுரித்து இருக்கின்றோம். முதல் இரண்டு வருடங்களுக்கும் வருடமொன்றுக்கு மூன்று இதழ்களை வெளியிடுவது என்ற அடிப்படையில் முதலில் பிரசுரிக்க தொடங்கினோம். இருப்பினும் எமது வாசகர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற தொடர்ச்சியான வேண்டுகோள்களை அடுத்து, வருடமொன்றுக்கு நான்கு இதழ்கள் என்ற அடிப்படையில் அதன் வெளியீட்டை அதிகரித்தோம்' என்று நெலும் ஹத்ஹெல்ல தெரிவித்தார். (த)

# மெலிபன் உற்பத்திச் செயற்பாட்டை நேரடியாக மாணவர் காண சந்தர்ப்பம்

நாட்டிலுள்ள முன்னணி பிஸ்கட் உற்பத்தியாளர்களான மெலிபன் பிஸ்கட் மனுபக்ஷரீஸ் அதன் மற்றுமொரு சமூகப் பொறுப்பு முயற்சியாக பாடசாலை மாணவர் களுக்கு தொழிற்சாலை பயணங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.



மெலிபன் பொருள்களின் உற்பத்திச் செய்முறையும் கம்பனியின் செயற்பாடுகளையும் பற்றிய நேரடி அனுபவத்துடன் கூடிய நடைமுறை அறிவினை வழங்குவதை நோக்காகக் கொண்டே இந்நிகழ்ச்சியானது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மக்களுக்கு 60 வருடகாலமாக நல்லதை வழங்குவதில் முன்னோடியாகவிருந்த ஒரு கம்பனி என்ற வகையில், மெலிபன் பாடசாலை மாணவர்களை கற்பிப்பதற்கான இந்த தைரியமான முயற்சியை எடுத்துள்ளது.

நாட்டிலுள்ள மிகச் சிறந்த பிஸ்கட் உற்பத்தி வசதிகளைக் காண்பதற்காக அவர்களுக்கு வாழ்நாளில் ஒரேயொரு தடவை கிடைக்கும் சந்தர்ப்பமாக இது காணப்படுகின்றது.(த)

# இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருகையில் 12 சதவீத அதிகரிப்பு

ஜூன்மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 12 சதவீதத்தால் அதிகரித்து 115,467 ஆக பதிவாகியுள்ளது.



இதில் இந்தியா மற்றும் சீனாவில் இருந்து வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக பதிவாகியிருந்தது. அந்த வகையில் இம் மாதகாலப்பகுதியில் இந்தியாவில் இருந்து வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண் ணிக்கை 19.5 சதவீதத்தால் அதிகரித்து 36, 972 ஆக பதிவாகியதுடன் கிழக்காசியாவில் இருந்து வருகைத்தந்த சுற்றுலாப் பயணிகளின் எண் ணிக்கை 19 சதவீதத்தால் அதிகரித்து 26,217 வரை விருத்தியடைந்தமைக்கு சீனா மற்றும் ஹொங்கொங்கில் இருந்து வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த எண்ணிக்கை பங்களிப்பு செய்தது.

அதே போல் இவ்வருடத்தின் ஜூன் மாதகாலப்பகுதிவரையான 6 மாத காலத்தில் நாட்டுக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 14.1 சதவீதத்தால் அதிரித்து 830,051 ஆக பதிவாகியுள்ளது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 15 சதவீதத்தால் அதிகரித்து 256, 567 ஆக பதிவு செய் யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)




# பென்டா பேபி உற்பத்திகள் சிறார்களின் சருமத்திற்கு ஏற்றதென சர்வதேச உறுதி

இலங்கையின் முதற்தர சிறார்களின் உற்பத்தி வர்த்தக நாமமான பென்டா பேபி,சிறார்களின் சருமத்தை பாதுகாப்பது உறுதி என சர்வதேச தரம் வாய்ந்த அமெரிக்க மருத்துவ ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற சிறுவர்களின் உற்பத்திப் பொருளுக்கு சர்வதேச தரம் வாய்ந்த இத்தகைய சான்றிதழ் வழங்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அமெரிக்காவின் எவ்.டி.ஏ நிறுவனத்தின் அனுமதியைப் பெற்ற நியூயோர்க் நகரில் அமைந்துள்ள சருமநோய் மற்றும் சிறுவர் நோய் விசேடவைத்தியர் குழுவொன்றினால் இந்தபரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. .பென்டா பேபி உற்பத்திகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மருத்துவ ஆய்வுகளின் மூலம் இந்த தகவல்கள் உறுதியாகியுள்ளன.


பென்டா பேபி உற்பத்திகள், சிறார்களின் சருமத்திற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாத அதேவேளை சருமத்தை பாதுகாத்து சருமத்திற்கு முழுமையான போஷாக்கு கொடுப்பதாக இதன் மூலம் உறுதியாகியுள்ளது. அதற்கமைய முழுமையான நம்பிக்கையுடன் பென்டா பேபி உற்பத்திகளை தமது மழலைகளுக்குப் பயன்படுத்த இலங்கைத் தாய்மார்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

செயற்கை எண்ணெய்கள் மற்றும் சிலிக்கன் அடங்காத சிறார்களுக்கான ஒரே உற்பத்தி பென்டா பேபி தயாரிப்புக்கள் ஆகும். உங்கள் மழலையின் சருமத்தை மென்மையாக வைத்திருக்கவும், சருமத்திற்கு தீங்கு விளைவிக்காமல் மிக பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கவும் உதவுகின்றது.பேபிகிறீம்,பேபி ஷெம்பூ, பேபி வொஷ் ஆகிய ரகங்களில் பென்டாபேபி உற்பத்திகளை பெற்றுக்கொள்ளலாம். (த)





பாலிநகர் மகா வித்தியாலயத்தின் தொழில் நுட்ப ஆய்வுகூடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. பாடசாலையின் அதிபர் திருமதி.யோ.தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, மற்றும் வடமாகாண அமைச்சர்கள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)



சாவகச்சேரி வாரிவனநாத சிவன் ஆலயத்துக்கு புதிதாக அமைக்கப்பட்ட சப்பை ரதத்தில் சுவாமி எழுந்தருளி வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம். (ஐ– 9)





சின்னப் புதக்குளம் பகுதியில் புதிய சந்தை திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சந்தையைத் திறந்து வைத்தார். (ஐ–402)



பச்சிளைப்பள்ளி பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்ட விளையாட்டு மைதான புணரமைப்பின் ஒரு கட்டமான கிளிநொச்சி பளை விளையாட்டு மைதானம் அண்மையில் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்த சங்கரி மைதானத்தைத் திறந்து வைக்கும் முகமாக திரைச்சீலையை நீக்கம் செய்தார். (21)





காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடேசர் அபிஷேகமும், ஆனி உத்தர தரிசனமும் இடம்பெற்றபோது. (ஐ–250)






ஏழாலை தெற்கு, மயிலங்காடு ஸ்ரீ முருகன் முன்பள்ளி விளையாட்டு விழா சனசமூக நிலையத்தலைவர் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேசசபைத்தலைவர் தி.பிரகாஷ் மற்றும் மயிலங்காடு ஸ்ரீமுருகன் வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி எஸ்.ரகுபதி ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ–86)







கிளிநொச்சி கரைச்சிக் கோட்ட முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா கிளிநொச்சி கருணை இல்ல விளையாட்டு மைதானத்தில் கிளிநொச்சி மாவட்ட கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வராஜா விந்தன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளார் முருகவேல், யாழ்–கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பிரதியேக செயலாளர் ஜெபநேசன் மற்றும் கல்வி வலய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டுசிறப்பித்தனர். (421)




வல்வெட்டித்துறை பொலிகண்டி ஸ்ரீ கந்தவன ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவில் இடம்பெற்ற தேர்த்திருவிழா காட்சிகள். (ஐ)




மல்லாகம் புனித சதா சகாயமாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா அண்மையில் நடைபெற்ற போது இம்பெற்ற காட்சிகள்.(ஐ-86)




சாவகச்சேரி வாரிவனநாத சிவன் ஆலய பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா அண்மையில் நடை பெற்றது.



ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர் இந்திய துணைத் தூதுவர் அ. நடராஜன், சிறப்பு விருந்தினரும் பழைய மாணவருமான சி.கிருஷ்ணானந்தன், பாடசாலை அதிபர் திருமதி பி.கிரிதரன் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் சித்தியடைந்த மாணவர்களையும் காணலாம். (ஐ)





முல்லைத்தீவு ஓட்டுசுட்டான் புளியங்குளம் பகுதியில் முல்லை ஒட்டு எனும் புதிய சிறு கடலை இனம் ஒன்று பரீட்சார்த்தமாக பயிரிடப்பட்டு அதனுடைய விளைச்சல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

நிகழ்வில் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வட மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் ,அமைச்சரின் செயலாளர். விவ சாய அதிகாரிகள் மற்றும் பிரதேசத்தைச் சேர்ந்த விவ சாயிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)






மானிப்பாய் இந்துக் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் விபுலானந்த ஜனன தினமும், முத்தமிழ் விழாவும், கல்லூரி மண்டபத்தில் தமிழ்ச் சங்கப் போசகரும், கல்லூரி அதிபருமான எஸ்.சிவநேசன் தலைமையில் நடைபெற்றது. விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும் கலந்து கொண்டோரையும் காணலாம்.



வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் கைத்தொழில் வணிக அமைச்சர் ரிஷாத் பதியுதீன், சமுர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் எம்.எஸ். எம். அமீர் அலி, முன்னாள் நீதிமன்ற நீதிவான் எ.எல்.என்.மைமூனா அஹமட், அகில இன ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் யூ. எல்.எம்.ஹனிபா ஆகியோர் முன்னிலையில் ஜோதிடர் வித்யா ரத்னா வி.ஆ.சிவராசா "சாம ஸ்ரீ" தேசிய விருதைப் பெறுவதைக் காணலாம். (ஐ)



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ். கோட்டையை சாம்றோக் கல்வி நிலையத்தின் தரம் 7,8,9 மாணவர்கள் சென்று பார்வையிட்ட போது. (ஐ)

## மரண அறிவித்தல்

### இளங்குமரன் இளநிலா



குறுமுனி அம்மன் வீதி, மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளங்குமரன் இளநிலா நேற்று (18.07.2015) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் இளங்குமரன் வாசுகி தம்பதியினரின் அன்பு புத்திரியும் பரஞ்சோதி, துரைராஜா, ஜெயமணி, சதாசிவம், தவமணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கலாதரன் அருந்ததி தம்பதியரின் பெறா மகளும் இந்துசா, மிதுசா ஆகியோரின் அன்புத் தங்கையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக குச்சுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


குறுமுனி அம்மன் வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(61606)

தகவல் :-
குடும்பத்தினர்.
077 899 9419

## மரண அறிவித்தல்

### முருகேசு சின்னராசா



வரணி இயற்றாலை வரணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சின்னராசா நேற்று (18.07.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி முருகேசு மற்றும் முருகேசு சிவகாமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தங்கராசா தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் பரிக்சாந்தி, லவிக்சாந்தி(லண்டன்) காலஞ்சென்ற பார்த்தீபன் மற்றும் கிருஷாந்தி, ஜெகதீபன்(ஜெகன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி இயற்றாலை

(63101)

தகவல் :-
குடும்பத்தினர்.
077 160 2376

## மரண அறிவித்தல்

### தம்பிஐயா இராசபூபதி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா இராசபூபதி 17.07.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அள வெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற உள் ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்,

திருமதி விஜயரட்ணம்
உருத்திராதேவி
யா/அருணோதயக் கல்லூரி
ஆசிரியர்
077 9168350

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(C/17993) (10.6)

## மரண அறிவித்தல்

### கனகசபை மேகவர்ணம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை மேகவர்ணம் நேற்று (18.07.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கனகம்மாவின் அன்புச் சகோதரனும், ஜெயந்தி (ஆசிரியை, றோ.க.த ஆரம்ப பாடசாலை), வசந்தி (இலிகிதர், ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்), முரளிதாஸ் (பொறியியலாளர்-கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவப்பிரகாசம், சசிவதனி (வைத்தியர், சுழிபுரம் பிரதேச சபை ஆயுள்வேத வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனும், சிவலக்சியின் அன்புப் பேரனும், சச்சிதானந்தம், காலஞ்சென்றவர்களான பத்மாதேவி, புவனேஸ்வரி, அம்பிகா தேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முரளிதாஸ்: 077 9326 145
வசந்தி: 077 4123 001
ஜெயந்தி: 077 8521 451

(C/17997) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## அக்ஷயா அழகுக்கலை பயிற்சியகம்

- அழகுக்கலை பயிற்சிகள் நடைபெறுகின்றன. சாறி பிளவுஸ்(6) பஞ்சாபி(5)
- கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, கறைகள், கரும்புள்ளிகள், நாட்பட்ட கறுப்பு வடுக்கள் அனைத்தையும் மாற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.
- உதட்டு கறுப்பு, கண் கருவளையம், கழுத்து கறுப்பு நீக்கும் கிறீம்
- ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை
- தலைமுடி வளரச் செய்யும் ஆயுர் வேத எண்ணெய்
- உடல், கை, கால் கருமையான புள்ளிகள் நீக்கும் கிறீம், நாட்பட்ட பித்த வெடிப்பு, அலர்ஜிக்குடன் கூடிய பித்த வெடிப்பு நீக்கும் ஆயுர்வேத கிறீம் விற்பனைக்கு உண்டு
- மார்பு கூட்டும் குறைக்கும், தொய்வு நீக்கும் கிறீம் குளிசை விற்பனைக்கு உண்டு.
- உடல் எடை கூட்டும், குறைக்கும் பால்மா, குளிசை, டொனிக் விற்பனைக்கு உண்டு.
- கருமை கறுப்பு நீக்கும் வைத்நிங் பேசியல், அழகு மிளிர வைக்கும் கோல்ட் பேசியல் செய்து கொள்ளலாம்.

அக்ஷயா
221, பிறவுண் றோட் சந்தி, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

077 538 7973

(63087)

## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி ஒ.டயானி அவர்களின் பாசமிகு தந்தை ஆகிய கரம்பொன் கிழக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட

### யோன்பிள்ளை ஒஸ்மன் தேவதாஸ்

அவர்கள் கடந்த 17.07.2015 இறைபதமடைந்தார். அவரின் பிரிவால் துயருற்றி ருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம் உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

(C/17991) (10.6)

## ExamPoint JAFFNA OFFICE

LOOKING FOR
**BUSINESS DEVELOPMENT AND SALES EXECUTIVE**

As part of our further expansion; we are currently recruiting experienced Business Development and Sales Executive to work full time in our Jaffna office. We are seeking dynamic, target driven, self-motivated and committed team player who has the ability to develop and promote new business within tight time frame.



- Dynamic and self-motivated individuals, with excellence sales and marketing experience.
- Self-starter and independently work with minimal supervision
- Hands on experience in MS Package (Word, Excel and PowerPoint)
- Well confident person with fluency in English and Tamil (Sinhala is an added advantage)
- Ability to communicate with all levels of peoples' including presenting seminars'
- Education background of experience would be highly desirable
- Minimum 3 years' experience in Education/Sales/Marketing

**Attractive salary and commission for the right candidates**
Please send your CV in word format and contact details of two --non related referees.

(63084) (10.6.3)

EXAMPOINT
**ExamPoint (Pvt) Ltd.**
No- 120/6, Palaly Road, Kantharmadam, Jaffna.
Email :info@exampoint.lk 077 9092423 Web :www.exampoint.lk

தேசத்தை உயிரூட்டுவோம்
புதிதாகவே ஆரம்பிப்போம்

இலங்கைத் தாயின்
அன்புப் பிள்ளைகளே,
அனுபவத்தின் படிப்பினையால்
தேசத்தைக் கட்டியெழுப்பிடவும்,
தேசத்தை உயிரூட்டிடவும்,
இடைநிறுத்திய இடத்திலிருந்து
மீண்டும் ஆரம்பிப்பதற்கான
புதிய பயணத்தில் எம்முடன்
ஒன்றிணைந்திட
உங்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### காணி விற்பனைக்கு
சாவகச்சேரி வீரசிங்கம் வீதியில் அமைந்திருக்கும் கமலாம்பிகை வித்தியாசாலைக்கு அருகில் வீட்டுடன் இணைந்த 2½ பரப்பு காணி விற்பனைக் குண்டு. (45.3.7) (63188) தொடர்பு:- 077 834 7885

### வீடு விற்பனைக்கு
இல56/5, சம்பியன்லேன், கொக்கு விலில் 2பரப்புக் காணி சகலவசதி களுடனான வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை

தொடர்பு:
021 2052635 , 0755437322

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
தடுப்பூசி போடப்பட்ட அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு 077 892 4932

### HONDA PLEASURE விற்பனைக்குண்டு
4வருடத்தில் 2ஆவது உரிமை யாளர். நிறம் - கறுப்பு முன்பக்கம், சிவப்பு பின்பக்கம் விலை மதிப்பு 95 ஆயிரம். கிட்டிய விலை எதிர்பார்க்கப்படு கிறது மேலும் விவரங்களுக்கு:

075 503 2515 (63240)(3.3.7)

### கடைக்கட்டடம் விற்பனைக்கு
புத்தூர் நவக்கிரி பிரதான வீதியில் சகல வசதிகளுடன் கூடிய, தொடராக வுள்ள மூன்று கடைக்கட்டடம் உடன் விற்பனைக்கு.

தொடர்பு-077 660 7851 (45.3.7)(52965)

### காணி விற்பனைக்கு
A9பாதையிலிருந்து20m தூரத்தில் கற்குளி வீதி, சாவகச்சேரியில் அமைந்த வெறுங்காணி(தென்னந்தோட்டம்) உடன் விற்பனைக்கு. 7பரப்பு அளவு.

(63033)(8.9) தொடர்பு: 077 975 0921

### கார் விற்பனைக்கு
( Toyota Corolla)
கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 622 7230

### விற்பனைக்கு
லெனோவா ரப் (I.Pad) புதியவை 5"X8" விற்பனைக்குண்டு.

(63243)(9.3.7) தொடர்பு: 071 418 2469

## தேவை

### வீடு வாடகைக்குத் தேவை
அரச உத்தியோகத்திலுள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு சகல வசதிகளும் கொண்ட வீடு யாழ்ப்பாணத்தில் வாடகைக்குத் தேவை.

(63059)(9.3.7) தொடர்பு: 077 889 3545

### வேலையாள்கள் உடன் தேவை
கொழும்பில் தொடர்மாடி கட்டடங்களில் உடனடி வேலை வாய்ப்பு.
மேசன் - 1500- 1700 கூலி 1000-1200 உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P: 077 422 3186

### தேவை
metro
* யாழ் நகரில் இயங்கும் பிரபல நிலஓடுகள் விற்பனை காட்சியறைக்கு விற்பனையாளர்கள் தேவை.
யாழ். நகரை அண்டிய கணினி அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது.

AIRMARK
* கொழும்பு நகரில் இயங்கும் பிரபல விமானப் பயணச் சீட்டு அலுவலகத்தின் யாழ். கிளைக்கு கணினி மற்றும் ஆங்கில அறிவுடைய யாழ். நகரை அண்டிய பெண்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: rsurendran@live.com
#212,Palaly Road, Jaffna.

### வீடு வாடகைக்குத் தேவை
அரச உத்தியோகத்தர் குடும்பமொன்றுக்கு சாவகச்சேரி நகர் அல்லது அதற்கு அண்மையான பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 071 211 7561

### வேலையாள் தேவை
சேவிஸ் வேலைக்கு அனுபவமுடைய வேலையாள் தேவை.
அம்பாள் சேவிஸ் ஸ்ரேசன்,
மருதனார் மடம்.

தொடர்பு : 077 787 2322

### தேவை
கொழும்பில் வசிக்கும் தமிழ் குடும்பத் திற்கு அனுபவமுள்ள பணிப்பெண்/ தாதிதேவை. நேர்மையான நம்பிக் கையுள்ள வயது 53இற்குட்பட்டவர்கள் தொடர்பு கொள்ள.

இல. SMS Call 077853 5767
67/2 , கிறிகறிஸ் ரோட், கொழும்பு 07

### தேவை
யாழ் நகரிலுள்ள காணிகளுக்கு முட்கம்பி வேலிகள் அடைப்பதற்கும் மேசன்மார்கள் ஒப்பந்த அடிப்படையில் அனுபவமுள்ள வர்கள் தேவை.

SMS பண்ணவும்.077 853 5767

## ஏனையவை

### வேலைவாய்ப்பு
FR Advertising and International கம்பனியில் புதிதாக ஆரம்பிக்கப்பட விருக்கும் எமது கிளைகளுக்கான பல புதிய பதவி வெற்றிடங்களுக்கான வேலை வாய்ப்புக்கள்.
தகைமைகள்: O/L or A/L ,Other Qualification. (O/L தகைமை அல்லாதவர்களும் விண்ணப் பிக்கலாம்)

தொடர்பு:
077 2083140, 077 354 8006,
077 526 7295

### வேலைவாய்ப்பு - ஆசிரியர்
அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட, நாவற்குழியில் உள்ள சர்வதேச ஆங்கில பாடசாலைக்கு முழு நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான வேலை வாய்ப்பு உண்டு.

தகைமைகள்
* முன்பள்ளி பாடநெறி(AM டிப்ளோமா அல்லது அதற்கு சமமான கற்கைநெறி)பூர்த்தி செய்திருத்தல்.
* அனுபவமுள்ளவராய் இருப்பது மேலதிக தகைமை.
* ஒரே அணியாக வேலை செய்பவராக இருப்பதுடன் சிநேகித பூர்வமாக பிள்ளை களுடன் பழகக் கூடிய சுறுசுறுப்பு உள்ளவராக இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களை கீழ் வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

kirubaebpm@gmail.com
T.P - 077 433 1841 (63223)(3.7.11)

### சிறப்பானதொரு வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் மூன்றுநேர உணவு, தங்குமிடவசதி, மாதாந்த சம்பளம், நிரந்தர வேலை வாய்ப்பு, உடன் திருப்பதி வெங்க டேசன் நிறுவனத்தின் சைவ உணவகத்திற் கும், தேயிலை உபசேல்ஸ் வேலை வாய்ப்புக் குமாக கீழ் வரும் வேலைகளுக்குக்கு அழைக்கின்றோம்.

1. கணக்குகள் பதிவாளர் (பெண்கள்)
2. பில் கிளாக்
3. உணவு பரிமாறுபவர்கள்(சப்பிளையர்)
4. மரக்கறி வெட்டுபவர்கள்
5. மேற்பார்வையாளர்
6. சமையலறை வேலையாள்கள்
7. சிறிய ரக வாகன சாரதிகள்
8. ரொட்டி, தேநீர் தயாரிப்பாளர்கள்
9. பகுதிநேர வேலையாள்கள்
10. கூலியாள்கள்

சகலரும் நேர்முகத் தேர்வுக்கு தொடர்பு கொள்ளவும். இடம்பெயர்ந்து வாழ்பவர்கள் வன்னியில் அநாதரவற்றவர்களுக்கு முன்னு ரிமை வழங்கப்படும்.

தொடர்பு: திருப்பதி வெங்கடேசன் என்ரபிறைசஸ்
7/3 ,பாமு வீதி, யாழ்ப்பாணம்.
T.P 077 791 7753
021 221 9191
077 934 5804

### VACANCY FOR A SCHOOL PRINCIPAL
Newly established English Medium school (International) situated at Nawatkuli - Jaffna.

**Lady Principal**

Excellent written & Spoken English with team work abilities will be advantaged .

**Attractive salary package**

Please apply within 10 days

**Email - princeistephen@gmail.com**
**kirubaebpm@gmail.com**
**Contact - 077 433 1841** (63222)(3.7.11)

### Hi Life Call Taxi
சகல விதமான வாகனங்களும் உங்கள் தேவைக்கு ஏற்ப வாடகைக்கு வழங்கப்படும்.
* Km அடிப்படையிலும் கட்டணம் அறவிடப்படும்.
* யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் ஆகிய பிரதேசங்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் Call Taxiசேவையை பெற்றுக் கொள்ளலாம்.
* திருமணக்கார், A/C Non A/C வான் சேவையும் வழங்கப்படும்.

தொடர்பு 077 500 6769

### விசா
கனடா Study Permit
தகைமை:
GCE (A/L) +ஆங்கில அறிவு + 18வயதிற்கு மேற்பட்ட எவரும் தகுதியுடையவர்கள்

ஆஸ்திரேலியா,நியூசிலாந்து,லண்டன், பிரான்ஸ்,ஜேர்மனி, சுவிஸ்,இத்தாலி,துருக்கி,ரஸ்யா,விசா
தகைமை:
+18 வயதிற்கு மேற்பட்ட எவரும் +ஆங்கில அறிவு தேவையில்லை

**வங்கிப் பணவைப்புகள்**
அனைத்து நாடுகளிற்கும் (Student) விசிட், பிசினஸ் விசாக்களிற்கும் மற்றும் அனைத்து தேவைகளிற்குமான வங்கிப் பணவைப்புகள் (சேமிப்பு கணக்கு,நிலையான வைப்பு) செய்து கொடுக்கப்படும்.

**Racas Travels & Tours (Pvt) Ltd.**
டெம்ளர் பிளேஸ்,டெம்பிள் ரோட்,கல்கிசை.
தொடர்பு:077 408 5699,075 405 0034

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

### வாடகைக்கு
யாழ் நகர மத்தியில் புகையிரத நிலை யம் பெரிய ஆஸ்பத்திரி பஸ் நிலையங் களுக்கு அருகில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு.

தொடர்பு: 077 242 5509

### Tourist / Business Visit Visa Settlement / Refusal
வெள்ளவத்தையில் சகல நாடுகளுக்குமான
**Online Visa Applications**



UK, CANADA, USA, AUSTRALIA, SWEDEN, DENMARK, NORWAY, GERMANY, FRANCE, ITALY, NEW ZEALAND, HOLLAND, INDIA

Air Ticketing, Translation, Travel Insurance, Valuation, Dual Citizenship Applications
ஆகியன செய்து தரப்படும்.
Computer Sales and Repairs, Computer Accessories, Computer Classes and Training, And IT Project Works Undertaken

**JANA COMPUTER TECH**
No. 385-1/1, Galle Road, Colombo- 06
Tel: 0773 480 494 | E-mail : visaonline5@gmail.com



* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் டெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (நர்ஷினி)

## மணமகள் தேவை

### மணமகன் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1986 ஆம் ஆண்டு, கேட்டை, 2இல் செவ்வாய் மணமகளிற்கு வெளிநாட்டு பிரஜாவுரிமை உடைய பொருத்தமான மணமகன் தேவை.

தொடர்பு : 077 613 9307 (63079)(3.7.11)

### மணமகள் தேவை
யாழ்.கொக்குவில், இந்து, 1989 ஐப்பசியில் பிறந்த, லக்கினத்தில் செவ்வாய் (தோஷமில்லை),உத்தர நட்சத்திரம், சிங்க இராசி, அரச சேவையில் உள்ள மணமகனுக்கு தொழில் புரியும் தகுந்த மணமகள் தேவை.

(63216)(45.3.7) தொ.பே. 077 653 1043

### மணமகள் தேவை
இந்திய குருக்கள் வம்சாவளியைச் சேர்ந்த, 1969 இல் பிறந்த சித்திரை நட்சத்திரம், பாரத்வஜ கோத்திரத்தைச் சேர்ந்த இந்தியாவில் அரச ஊழியராகப் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.
சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 423 4807 (63060)(3.11)

## சோதிடம்

### சோதிடம்
ஜாதகம், கைரேகை, எண்விஞ்ஞானம், திருமணப் பொருத்தம், வீட்டுக்கு நிலையம் வகுத்தல் போன்றவற்றிற்கு தொடர்பு கொள்ளவும்.

சிவா சோதிடம்
100, அரசடி வீதி, கந்தர்மடம்.
யாழ்ப்பாணம்.
(யாழ்/இந்து மகளிர் கல்லூரியடி)
077 899 6281

### இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N.குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா?, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச் சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல்
மாலை 5.00 மணி வரை.
இல.424/11, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
(சிவன் கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)
T.P: 072 681 6681, 072 681 6691

## நீங்கள் முடி உதிர்வு, பொடுகு, அரிப்பு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா???

இப் பிரச்சினைகளிற்கு தீர்வாக இன்றே பாவியுங்கள் சிறந்த மூலிகைகள் அடங்கிய

**"றோயல் அகஸ்தியா கூந்தல் எண்ணெய்"**

தலைக்கு குளிர்ச்சியினை அளித்து தலைச் சருமத்துக்கு ஊட்டமளித்து, முடி உதிர்வைத் தடுத்து, கூந்தலைக் கருமையாகவும், நீளமாகவும், அடர்த்தியாகவும் வளரச் செய்து முகத்திற்கு பொலிவை அளிக்கவல்லது.

சந்தைப்படுத்துவோர்: சிவா நறுமணப்பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்) தொ.பே: 021 222 2567
Manufactured by: Royal Industries Colombo -13

Quality Royal A.Kasthiya Hair Oil Guaranteed

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துக் கடைகளிலும், மருந்தகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி/16708) (4.3.7)

## மாடி வீடும் காணியும் விற்பனைக்கு

உரும்பிராயில், இலக்கம் 6, பழைய டிஸ்பென்சரி ஒழுங்கையில் ஏழுஅரை(7½) பரப்புக் காணியில் அமைந்துள்ள மூன்று அறைகள், பெரிய சமையலறை, இரண்டு வரவேற்பறைகள், (HALL), STORE ROOM, இரண்டு குளியல் அறைகள், இரண்டு கழிவறைகள், மோட்டர் பூட்டிய கிணறு, மூன்று பக்க மதிலுடன் மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : ராசா : 021 223 1148
இலங்கோ :004 474 174 44910

## ஐரோப்பாவில் கல்வி கற்று வேலை வாய்ப்புடன் கூடிய வாழ்க்கையை அங்கு தொடர ஆயத்தமா?



Medicine
Engineering
Nursing
Technical
Accounting

இலவச கருத்தரங்கும் நேரடி அனுமதியும்

இலவச அனுமதிக்கு:
077 233 5131
024 222 7993

Date & Time - 25th 07-15 9.00 Am
Venue - Sri Lanka Red Cross Society
Off Park road, Vavunia.

**STUDENT CONSULTANCY UNIT**
**RED CROSS CONSULTANCY SERVICES**
*Consultancy arm of the Sri Lankan Red Cross Society*

3rd Floor, Red Cross BLDG,No.106,Dharmapala Mw,Colombo 07
Contact No : +94114 347 070 / +94777670 2222
+94776700009 / +94766716083
Email-admission@rcscu.lk Web :www@rcscu.lk

## ஓமான் வேலைவாய்ப்பு

| Position | Gender | Qty | Salary RO | Salary LKR |
|---|---|---|---|---|
| சமையல்காரர் | ஆண் | 25 | 120 | 43,800/- |
| பேக்கர்ஸ் | ஆண் | 25 | 120 | 43,800/- |
| GA- சுத்திகரிப்பாளர் (ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள்) | ஆண் | 25 | 90 | 32,850/- |
| GA- Counter Hand (ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள்) | ஆண் | 25 | 90 | 32,850/- |
| GA- சுத்திகரிப்பாளர் | ஆண் | 25 | 70 | 25,550/- |
| GA- Counter Hand | ஆண் | 25 | 70 | 25,550/- |

* தங்குமிட வசதி இலவசம்.
* வைத்திய வசதி இலவசம்.
* சாப்பாடு இலவசம்.

வயதெல்லை 21 தொடக்கம் 35 வயது வரை.

hr@npmanpower.com
npmanpowerconsultants@gmail.com

OR = LKR 365/-

AI/2617/Advt/07/15

*We Care for your Career*
**N.P. MANPOWER CONSULTANTS**
No: 24 /A, Visaka Road, Bambalapitiya, Colombo 4. (In Front of Old House of Fashion)
S.L.B.F.E.NO: 2817
Tel: +94 112 591 596 / 0112 591 597 Fax: +94 112 591 598
Hotline: 0777 553 442 / 0777 553 558 / 0777 552 558 / 0777 552 388 / 0777 552 108

## ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி மாரி அம்மன் பண்டிதர் வெங்கடேஸ்

மெய்யன்பர்களே! T.P 076 770 0820

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிடர் வல்லுநர் கைரேகை மூலம் துல்லியமான நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை, சாதகம், கல்வி, உத்தியோகம், திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப்பயணம் பற்றிய விவரங்களை, பலன் களை குறைந்த செலவில் கூறுவார், பதினொரு நாள்களுக்குள் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பார். 19.07.2015 -06.08.2015 ஆம் திகதி வரை இருப்பார்.

இல 185, கஸ்தூரியார் வீதி ,யாழ்ப்பாணம்.
(நியூ லலிதா மாளிகை) மீனாட்சி தங்குமடம் (ராஜா தியேட்டருக்கு அருகில்)
நேரம் காலை 7.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை பார்க்கப்படும்.

## முதலீட்டாளர்கள் தேவை

ஆசிரியர்கள் பயிற்சி நிறுவனமான Blooming Buds சர்வதேச பாடசாலையானது தனது 45 கிளை நிறுவனங்களை பல்வேறு இடங்களில் ஸ்தாபிக்கவுள்ளது. இதில் முதல் கட்டமாக யாழ்ப்பாணத்தில் 9கிளை நிறுவனங்களை ஸ்தாபிக்கவுள்ளது. இதிலொன்றாக யாழ்ப்பாணம், சுதுமலையில் ஆரம்பித்திருக்கும் எமது நிறுவனத்திற்கு 5லட்சம் வரையான பணத்தொகையை முதலிடுவோர் தேவை. அவ்வாறு முதலிடுவோரை அந்நிறுவனத்தின் இயக்குநர் ஆக்குவதுடன் நிறுவனத்திற்கு கிடைக்கும் இலாபத்தில் ஒரு பங்கு பெற்றுத்தரப்படும்.

இதற்கிணங்க முதலிடுவோர் இருப்பின் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**Blooming Buds International**
**Teacher Training School**
No.390/2/1, Base Line Road,
Dematagoda, Colombo-09.
Tel : 011 2677641,
071 5669641

BLOOMING BUDS The Wisdom of children PV 94034

## பயிற்சி மூலம் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்

**English Medium (Gr 1 - 11) All Subjects**

10 மாதங்கள்தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

### மேலதிகமாக

சிங்களக் கல்வி மற்றும் கணினி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது.

தொடர்புகள்: தெமட்டகொட, புத்தளம், ஹட்டன், யாழ்ப்பாணம் (சுதுமலை),கல்முனை

நேர்முகத்தேர்வும் ஒருநாள் ஆசிரியர்பயிற்சி வேலைத்திட்டமும் ஆரம்பமாகவுள்ளன.பிரதான நிறுவனம் உட்பட புதிய கிளைகள் 45 இற்கு 300 ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளும் வேலைத் திட்டம்.

### தகைமைகள்

* க.பொ.த சாதாரண தரம் 6பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும்.
* ஆங்கில பாடத்தில் குறைவானவர்களிற்கு 60நாள்களிற்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படும்.
* பயிற்சி கிழமையில் 5நாள்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களிற்குக் கொடுக்கப்படும்.
* பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவீர்கள்.
* போயாதினம் உட்பட அரசவிடுமுறை தவிர ஏனைய நாள்கள் காலை 8.30 - 5.00 வரை வேலை நாள்களாகும்.

பயிற்சியின் பின்னர் மாதாந்தக்கட்டணம் 34,500/= ஐ சம்பளமாகக் கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்.

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சி பத்திரம் தராதரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் (9x4) அளவுள்ள தபாலுறையில் 45.00 மேல் மூலையில் 01 - 11 ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும்.

**Teacher Training School**
390/2/1 Baseline road Dematagoda
தொலைபேசி : 071 5669641/ 077 1529731/ 0112 677641
075 493 3349

*பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி*

**Officer**
**Blooming Buds International**
**Teacher Training School No.388/1/1**
**Base Line Road, Dematagoda, Colombo-09**

BLOOMING BUDS The Wisdom of children PV 94034

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கு ஐயப்பன் கோவில் வீதியில் உள்ள 18.61 குழி காணி உடன் விற்பனைக்கு உண்டு. பரப்பு 6 லட்சம் எனினும் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 071 636 1866, ரஜனி - 077 1144279

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் மூன்று Strores உடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.(Lotus Park Hote) இற்கு அருகில் உள்ளது.

(c 17869) (3.5.6.7) **தொடர்பு: 077 192 3430**

## மாடி வீடு விற்பனைக்கு/ வாடகைக்கு

யாழ்.இல 59, கோயில் வீதியில் 1½ பரப்பில் 8 அறைகளும் 2Hall இணைந்த குளியலறை கிணறு வாகனத்தரிப்பிட வசதியுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்கு / வாடகைக்கு (நிறுவனங்கள்/ வீடு) உண்டு.


**தொடர்பு: 077 776 7976**
**0773155072**

(c 17863) (1.3.5.6)

## Majestic

Cineplex Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில் CEYLON THEATRES




மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.30 a.m





| | |
|---|---|
| சில்வர் | 10.15 / 2.15 / 6.15 |
| ப்ரொன்ஸ் | 10.30 / 2.30 / 6.30 |

விசாரணை ☎ 021- 2227712

CeylonTheatres
www.ceylontheatres.com

## அறுபதாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்




திருமதி
M.P.R. **கனகரட்ணம்**

கடந்த 36 வருடகாலமாக கல்விச் சேவை புரிந்து ஆசிரியராக உப அதிபராகக் கடமையாற்றி ஓய்வு நிலையில் இருக்கும் எனது தாயார் இன்று தனது 60ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். அவரைப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

(C/17859)(10.6.3)

# நூடில்ஸ் பிரச்சினை குறித்து சுகாதார அமைச்சு ஆராய்வு

கொழும்பு, ஜூலை 19

உடனடியாக தயாரித்து உண்ணக்கூடிய நூடில்ஸ் வகை ஒன்றில் ஈயம் கலந்துள்ளதாக இந்தியாவில் எழுந்துள்ள சர்ச்சைகளின் பின்னணியில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தலைமையின் கீழ் இலங்கை சுகாதார அமைச்சின் உணவு ஆலோசனைச் சபை இது தொடர்பாக உள்நாட்டில் ஏற்படக்கூடிய நிலைமைகளுக்குத் தீர்வுகாண்பது தொடர்பில் விசேட உணவு ஆலோசனைச் சபைக்கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தது. இந்தக் கூட்டத்தில் நுகர்வோர் விவகாரங்கள் அதிகார சபை மற்றும் இலங்கைத்தர அங்கீகாரத்தின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இலங்கையில் உள்ள அனைத்து நூடில்ஸ் வகைகளின் உள்ளடக்கம், உற்பத்தி நடைமுறை மற்றும் சேவைப் பொருள்கள் தொடர்பான கலந்துரையாடல் இந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றிருந்தது மொனோசோடியம், குளுட்டாமேட் நூடில்ஸ் தவிர இந்தியாவிலிருந்தோ அல்லது வேறு எந்த நாட்டிலும் இருந்தோ எவ்வகையான நூடில்ஸும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதில்லை என்ற இந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஏனையமூலப்பொருள்கள் மற்றும் சேர்க்கைப் பொருள்கள் அனைத்தும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதற்குப் புறம்பாக சோதனைக்கு உட்படுத்தப்பட்ட மாதிரிகள் ஆய்வு அறிக்கைகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பில் நச்சுப் பொருள்கள் தொடர்பான தேசிய தகவல் நிலையத்தின் தலைமை அதிகாரியான மருத்துவர் வருண குணதிலக அவர்களின் ஆலோசனையையும் அதிகாரிகள் பெற்றி ருந்தனர்.

இந்த ஆய்வு முடிகளின் பிரகாரம் இந்த உணவு வகைகளில் உள்ள ஈயத்தின் அளவானது ஏனைய நாடுகளில் உள்ள அளவுகளை விடவும் குறைந்த மட்டத்தில் உள்ளதாக வெளிப்பட்டுள்ளது. உணவு ஆலோசனைச்சபையின் கூட்டத்தின் போது நூடில்ஸ் வகைகளில் இருக்கவேண்டிய ஈயத்தின் அளவு தொடர்பாக எந்தவிதமான நியம கட்டுப்பாடுகளோ அல்லது வழிகாட்டல் களோ இலங்கையில் கிடையாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய நாடுகளில் ஈயத்தின் அளவு தொடர்பான விவரங்கள் வருமாறு;

இந்தியா – 2.5 மி.கி/ கி.கி

மலேசியா – 2.0 மி.கி/ கி.கி

சிங்கப்பூர் – 2.0 மி.கி/ கி.கி

ஆஸ்திரேலியா – 0.3 மி.கி/ கி.கி

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம், சந்தையில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளின் உள்ள ஈயத்தின் அளவு குறைந்த பட்சஅள வான 0.3 மி.கி/ கி.கி இனை விடவும் குறை வாக உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

எனினும், நுகர்வோரின் ஆரோக்கியம் மற்றும் நலனைக் கருத்தில்கொண்டு, உணவு ஆலோசனைச்சபை பின்வரும் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது.

1. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற நூடில்ஸ் வகைகள் அனைத் தும் சந்தையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் ஈயம், இரசம், ஆசனிக் மற்றும் கட்மியம் தொடர்பான சோதனைக்கு உள்ளாக்கப்படவுள்ளன.

2. நூடில்ஸ் உற்பத்தி நிறு வனங்கள் அனைத்தும் தற்போது சந்தையில் உள்ள உற்பத்தி தொகுதிகளின் மாதிரிகளை, உண வுச் சட்டத்தின் கீழ் (உண வுப் பரிசோதகர்கள்) ஆய்வு மற்றும் கண்காணிப்பு நடமுறைகளுக்காக அவற்றில் உள்ள ஈயத்தின் அளவுகளைக் கண்டறியும் சோதனை களுக்காக உரிய ஆய்வு கூடங்களுக்கும், அனுமதிக்கும் அதிகாரிக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. ஆய்வுகளின் போது மாதிரிகளில் ஈயத்தின் அளவு 0.3 மி.கி / கி.கி இற்கும் அதிகமாக இருக்கும் பட்சத்தில் குறித்த நூடில்ஸ்உற்பத்தித்தொகுதிகள் அனைத்தும் சந்தையிலிருந்து உடனடியாக மீளப்பெறப்படல் வேண்டும்.

4. இந்த சர்ச்சை தீரும் வரை அனைத்து நூடில்ஸ் உற்பத்தி நிறுவனங்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் நூடில்ஸ் தொடர்பான விளம்பரங்களையும், ஊக்குவிப்புச் செயற்பாடுகளையும் முன்னெடுப்பதை மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் வேண்டும். (த)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **செல்வி தயோதினி** அவர்களின் பாசமிகு தந்தை **சுந்தரம் செல்வராசா** அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(63065)(3,7,31)

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.



## இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி



### சொ.விஜயராசா

(சொக்கன், டானியல், ராஜன்)

பிறப்பு 07.02.1960 இறப்பு 11.07.2015

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும், யாழ். மாவட்ட ரீதியில் சகல விளையாட்டுக்களிலும் கழகத்தை முன்னணி வகிக்க அரும்பாடுபட்டவரும்,தன்னலமற்ற சேவையாளரும், விளையாட்டுக்கு அர்ப்பணித்த பொதுநலவாதியும்,நிர்வாகத்தின் முதுகெலும்பாக நீண்டகாலம் செயற்பட்டவரும்,பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக சர்வதேச தொடர் பாடலுக்குப் பொறுப்பாக செயற்பட்ட தியாகச் செம்மல் சொக்கலிங்கம் விஜயராசா (சொக்கன்) அவர்கள் லண்டன் மாநகரில் எம்மை எல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கி இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

ஐக்கிய விளையாட்டுக் கழகம்
பருத்தித்துறை.

(59785) (45.7.3)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 09.05.1936 மறைவு 19.06.2015

கடந்த 19.06.2015 வெள்ளிக்கிழமை சிவபதம் எய்திய

### அமரர் நாகம்மா கந்தையா

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோப்பாய் தெற்கு.
கட்டப்பிராய்.

ஜெயா (வவா)
குடும்பத்தினர்.

(63069)(45.7.3)



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 20.05.2015 புதன்கிழமை சிவபதமடைந்த எமது அன்புச் செல்வம்

### அமரர் சின்னராசா நிறோஜினி

தோற்றம் 03.01.1997

மறைவு 20.05.2015

இன்று (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

3 ஆம்,குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.


குடும்பத்தினர்.
(சின்னராசா வதனா)

(63068)(45.7.3)



## மரண அறிவித்தல்

### பஞ்சலிங்கம் கமலேந்திரன்



யாழ்ப்பாணம் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வத்தளையை வதிவிடமாகவும் கொண்ட மாபொல பணிப்பாளர் - பஞ்சலிங்கம் கமலேந்திரன் (றூபன்) N.S.K.Oil Seals Company Pvt Ltd அவர்கள் 16.07.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம் - சிவகாம்பிகை தம்பதியினரின் சிரேஷ்டபுத்திரனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் திரு. திருமதி பொன்னையா பரமேஸ்வரி தம்பதியினரின் மதிப்பிற்குரிய மருமகனும், விஜிஜேந்திரா, சுகந்தி, மாலதி, அம்பிகை ஆகியோரின் பாசமிகு அண்ணாவும் லவாஞ்சலி, நிஷாஞ்சலி ஆகியோரின் தந்தையும் செந்தூர் மயூரி, அருள்ராசா, சிவநேசன், குமரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆரணி, ஆதவன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் கஜப்பிரியன், வத்சலாயினி, நிஷாந்தன், நிவேதா, கஜந்தன், நிகித்தா, மதிப்பிரதயன், துரன்யா ஆகியோரின் பாசமிகு பெரியமாமாவும் நாகராசா, ராசலிங்கம், அருமைத்துரை, ஐயுகம், கிறகறி யோகராஜசிங்கம், ராஜதேவி, நாகேஸ்வரி, றுக்மணி ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் ராசலெட்சுமி, தவமணிதேவி, பூமலர், பாக்கியலெட்சுமி ராசரெட்ணம் காலஞ் சென்றவர்களான அன்னதேவன், மகாலிங்கம், சிவலிங்கம், கந்தசாமி, தருமராசா, சின்னம்மா, திருநாவுக்கரசு, ஞானம் ஆகியோரின் அன்பு மருமகனும் யசோதரன், பத்மா, மயூரன் ஆகியோரின் அத்தானும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வத்தளை மகிந்த மலர்சாலையில் (18.07.2015) வைக்கப்பட்டு இன்று (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை வத்தளையிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதன்பின்பு சுன்னாகத்திலுள்ள அன்னாரின் வீட்டிலும் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 23.07.2015 வியாழக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் சக அலுவலக ஊழியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.
077 374 5832, 077 311 1106 (63082)(3.6.9)

தகவல்:
மனைவி, சகோதர சகோதரிகள்
குடும்பம் மற்றும் உறவினர்கள்.



## மரண அறிவித்தல்

### திருமதி சூரியகாந்தி அம்மா பரஞ்சோதி



தோற்றம் 08.06.1935 மறைவு 16.07.2015

பருத்தித்துறை, சந்தை மேற்கு ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூரியகாந்தி அம்மா பரஞ்சோதி 16.07.2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பி இராசரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரஞ்சோதி அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சந்திரமூர்த்தி தாயு மானவர் (அவுஸ்திரேலியா), புஸ்பராணி (நோர்வே), மாணிக்கம்மா ஆகியோரின் சகோதரியும் சிறினிவாசன், விஜிதா, சுஜிதா (லண்டன்) , கண்ணன் (பொது முகாமை யாளர் - வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்), கிருஷ்ணா (கிச்சன் - பிரான்ஸ்) ஜெயலட்சுமி ஆகியோரின் தாயாரும் இரத்தினராணி காலஞ்சென்ற குமார், நவரத்தினம் (லண்டன்), சகுந்தலா, சுதாகௌரி, ஜெயபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.07.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை, சுப்பர்மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தை மேற்கு ஒழுங்கை,
பருத்தித்துறை.
077 288 1869, 077 078 3809 (59788)(3.9.7)

தகவல்:
குடும்பத்தினர்.

# அதிக தமிழ்ப் பிரதிநிதித்துவம் தேசியக் கட்சிகளில் வேண்டும்

## ஐ.தே.க யாழ்.மாவட்ட வேட்பாளர் வைத்தியர் சிவசங்கர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19
எமது மக்களின் தலை விதியை தீர்மானிக்கும் சக்திகளின் இடமாக விளங்கும் தேசியக் கட்சிகளில் அதிக தமிழ்ப் பிரதிநிதித்துவங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே நாம் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றோம் என ஐ.தே.கட்சியின் யாழ்மாவட்ட வேட்பாளர் வைத்தியர் சிவசங்கர் தெரிவித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்றில் ஐ.தே. கட்சியின் சார்பில் போட்டியிடும் சிவசங்கரின் தேர்தல் அறிமுகக் கூட்டம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றபோதே அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்.

நாட்டில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியானது ஓர் இனவாதக் கட்சியல்ல அது ஓர் தேசியக்கட்சி நாம் எந்தக் கட்சியில் இருந்தாலும் தமிழன் என்பதுதான் உண்மை. நாம் ஐ.தே.கட்சிக்கு விற்கப்பட்டவர்கள் அல்ல எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் சக்தியாக மலரவே நாம் இந்தத் தேர்தலில் போட் டியிடுகின்றோம் எனத் தெரிவித்து தனது தேர்தல் கொள்கையையும் வாசித்தார்.

இங்கு இவரை ஆதரித்து உரையாற்றிய இக்கட்சியின் யாழ். மாவட்ட பிரதம வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் .

இன்று நாடாளுமன்றத்தில் ஆயுதக் குழுக்களும் ஆயுதத்துடன் தொடர்புபட்டவர்களுமே அதிகம் அங்கம் வகிக்கின்றனர். அவர்களை அகற்றவே நாம் இத் தேர்தலில் போட்டியிடுகின்றோம். ஏனெனில் அதிக தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்தவர்களும் இவர்கள்தான். ஆனால் நாம் எந்தக் கட்சியில் இருந்தாலும் விலை போக மாட்டோம். ஏனெனில் எமக்கு கட்சியை பற்றித் தேவையில்லை.இதேவேளை இன்று இந்த மாவட்டத்தில் மீண்டும் ஆயுதக் குழுக்கள் தேர்தலில் களமிறங்கியுள்ளனர் அவர்களை தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும்–என்றார்.

(த–101)

### வலி.வடக்கு

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பஸ் நாயக்கா, முப்படைத் தளபதிகளுடன் யாழ்ப்பாணத்துக்கு நேற்று இரு நாள் பயணமாக வந்தடைந்தார். பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய குழு வினரை, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி வரவேற்றார். இதன் பின்னர், முப்படைத் தளபதிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அடங்கிய குழுவினர், வலி.வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் குறிப்பிட்ட சில இடங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில், மூடப்பட்டுள்ள பாதைகளுக்கு அருகில் விசேடமாக அமைக்கப்பட்டிருந்த பந்தல்களில் இந்தக் குழுவினர் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் பி.ப. 3 மணிக்கு, பலாலி இராணுவத் தலைமையகத்தில் முக்கிய உயர்மட்டக் கலந்துரையாடல் ஆரம்பமானது. இதில் பாதுகாப்புஅமைச்சின் செயலாளர், மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் திருமதி ரஞ்சினி நடராஜபிள்ளை, அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில், மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் விடுவிக்கப்பட வேண்டிய வீதிகள், பாடசாலைகள் மற்றும் காணிகள் தொடர்பில் கோரிக்கை விடுத்தார்.

வல்லை – அராலி வீதியில் சுமார் 2 கிலோ மீற்றர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இராணுவத் தளபதியைப் பதில் வழங்குமாறு கேட்டுக் கொண்டார். இதன்போது இராணுவத் தளபதி, விமான நிலையத்தை அந்த வீதி ஊடறுப்பதன் காரணமாக விடுவிக்கப்பட முடியாது என்று பதிலளித்தார். இதன்போது மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர், அதற்கான மாற்றுப் பாதை தொடர்பில் கேட்டபோதும் அதற்கும் இராணுவத் தளபதி இணங்கவில்லை.

இதேபோன்று, தொண்டமானாறு – பலாலி – காங்கேசன்துறை – கீரிமலை வரையிலான கடலோரப் பாதையை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டபோதும், அதற்கும் இராணுவத் தளபதி சம்மதிக்கவில்லை. அந்தப் பாதை ஏன் விடுவிக்கப்படவேண்டும் என்று அவர் பதில் கேள்வி எழுப்பியுள்ளார். மக்களின் போக்குவரத்துக்கான அவசியம், நேர விரயம் என்பன தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டபோதும் அதனை இராணுவத்தினர் கருத்தில் கொள்ளவில்லை.

வளலாயில் எஞ்சிய பகுதி விடுவிக்கப்படுவது தொடர்பில் கேட்கப்பட்டபோது , விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலேயே மக்கள் வந்து குடியமரவில்லை. மேலும் காணிகள் ஏன் விடுவிக்கப்படவேண்டும் என்று கேட்கின்றீர்கள் என்று பதில் கேள்வி எழுப்பியுள்ளனர் இராணுவத்தினர்.

மயிலிட்டி துறைமுகத்தை மக்கள் பாவனைக்கு விடுவிப்பது தொடர்பில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, துறைமுகம் சுனாமி இடரில் சேதமடைந்துள்ளது என்றும் அதனால் புதிய துறைமுகம் நிர்மாணிக்கலாம் என்றும் படைத்தரப்பினர் பதில் வழங்கியுள்ளனர்.

இராணுவத்தினரின் பதில்கள் ஏமாற்றமாக இருந்ததாக, நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட அரச அதிகாரிகள் தெரிவித்தனர். (த–5)

### பயங்கரவாதம்

களை அச்சுறுத்துவதற்காக கருத்து வெளியிடப்படுகின்றது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்றுக் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:–

ஓகஸ்ட் 17 ஆம் திகதியின் பின்னர் நாம் ஆட்சிக்கு வந்ததும், புதிய அரசியல் கூட்டணி, புதிய பொருளாதாரத் திட்டங்களை உருவாக்குவோம். இதனூடாக நாட்டின் வளர்ச்சிப் பாதைக்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

19 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய ஊழல், மோசடிகளைத் தடுக்க நடவடிக்கை எடுப்போம். ஹொங் கொங் நாட்டில்தான் ஊழல், மோசடிகளுக்கு எதிராக கடுமையான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அந்த நாட்டின் பொறிமுறையைப் போல எமது நாட்டிலும் ஊழல், மோசடிகளுக்கு எதிரான பொறிமுறையை உருவாக்குவோம்.

நாட்டில் ஐக்கியத்தைப் பாதுகாக்க இரு பிரதான கட்சிகளும் இணங்கியுள்ளன. இந்நிலையில், பயங்கரவாதம், பிரிவினைவாதம் பற்றிய பாடல்கள் தற்போது மீண்டும் பாடப்படுகின்றது. இவற்றை ஜனாதிபதித் தேர்தலின்போதே நாம் கேட்டுவிட்டோம். எவ்வித ஆதாரங்களும், அடிப்படைகளும் இல்லாமல், மக்களை அச்சுறுத்துவ தற்காக பயங்கரவாதம், பிரிவினைவாதம் பற்றி கருத்து வெளியிடப்படுகின்றது.

பயங்கரவாதத்தினாலோ அல்லது ஆயுதக் குழுக்களினாலோ அரசைக் கவிழ்ப்பதற்கு நாம் இடமளிக் கமாட்டோம்–என்றார். (த–சி)

### பிரிட்டன்

றுள்ள முதலமைச்சர் அங்கு பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து வருகின்றார். அதனடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரிட்டன் கிளையினரையும் சந்தித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலின்போது, வடக்கு நிலைமைகள், இடம்பெயர்ந்த மற்றும் மீள்குடியேறிய மக்களின் நிலைமைகள், விடுவிக்கப்பட்ட பகுதிகள் என்பன தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திகள், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இது விடயமாக அங்குள்ள மக்களுக்கு உதவிகளை நேரடியாகவோ அல்லது அமைப்புக்களின் ஊடாகவோ வழங்குவது பற்றியும் சிறியளவிலான முதலீடுகளை செய்வது தொடர்பிலும் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டதோடு, பெரியளவிலான முதலீடுகளை தற்போதைய நிலையில் தவிர்த்துக் கொள்வது பற்றியும் ஆழமாக ஆராயப்பட்டது.

அத்துடன் வட பகுதியின் கல்வி மேம்பாடு குறித்து இந்தச் சந்திப்பின்போது மிகுந்த அக்கறை செலுத்தப்பட்டதோடு, அதற்கு எவ்வாறான உதவிகளை வழங்கலாம் என்பது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது. மற்றும் வடபகுதியின் கலாசார சீர்கேடுகள் பற்றி அக்கறையுடன் கருத்துக்கள் பகிரப்பட்டதோடு அதனைத் தடுப்பதற்கு என்னவகையிலான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்பது குறித்தும் பேசப்பட்டது. இதன்போது மாணவர்கள் மத்தியில் மது, போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளமை தொடர்பில் முதலமைச்சர் பெரிதும் கவலை தெரிவித்துள்ளார். (த–5)

### யாழில்

கப் பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில், தபால்மூலம் வாக்களிக்கத் தகுதியானவர்களின் பட்டியல் ஒவ்வொரு மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தினாலும் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 ஆயிரம் பேர் தபால்மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 861 பேர் விண்ணப்பித்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 939 பேரும், மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 613 பேரும், தபால்மூல வாக்களிப்புக்காக விண்ணப்பித்துள்ளனர்.

இவ்வாறு விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களை மாத்திரம் தேர்வு செய்யும் நடவடிக்கைகள் மாவட்ட தேர்தல்கள் திணைக்களங் களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (த–5)

### தமிழ்

முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் இடமளிக்கப்பட்டுள்ள முதல் தரக் கொலைகாரன் பற்றிய உறுதியான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. இந்த நபர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், சந்திரநேரு மற்றும் பேராசிரியர் ரவீந்திரநாத் ஆகியோரின் படுகொலைகளில் நேரடியாகத் தொடர்புடையவர், என்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்திருக்கிறார்.

எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் குறிப்பிட்ட முதல் தர கொலையாளி யார் என்ற விவரத்தை அவர் வெளியிடவில்லை. அதேவேளை, முரளிதரனின் (கருணாவின்) முன்னாள் சகாவும், முன்னாள் கிழக்கு முதல்வருமான பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தன் இந்தத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (த–5)

### அமைச்சுப்

டோபுள்ளே, துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை பிரதியமைச்சர் எரிக் வீரவர்த்தன, கிராமிய பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லசந்த அழகியவண்ண தமது பிரதியமைச்சுப் பதவிகளை துறந்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக இருந்து கொண்டு கட்சிக்கு எதிராகக் கருத்துகளை முன்வைத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தாம் பதவிகளை துறந்ததாக அவர்கள் குறிப்பிட்டனர்.

மைத்திரி தலைமையிலான அரசில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 25 பேர் அளவில் அமைச்சுப் பொறுப்புக்களை வகிக்கின்றனர். இந்நிலையில், தேர்தலுக்கு முன்னர் இவர்கள் அனைவரும் இராஜிநாமா செய்தால், ஜனாதிபதி மைத்திரி நிலை குலைந்து போய்விடுவார் என்ற எதிர்பார்ப்பிலேயே மஹிந்த தரப்பு இவ்வாறானதொரு திட்டத்தை வகுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய எதிர்வரும் சில தினங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலர் தமது அமைச்சுப் பதவிகளை துறப்பர் என்றும், இதனைத் தடுப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசித்து வருகின்றார் எனவும் அறியமுடிகின்றது. (த–சி)

### கூட்டமைப்பின்

தன் மற்றும் அங்கத்துவக் கட்சித் தலைவர்கள் அனைவரும் பங்கெடுக்கும் மாபெரும் கூட்டமாக இந்தக் கூட்டம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெயரில் வடக்கு – கிழக்கின் 5 தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது உத்தியோகபூர்வ பரப்புரைக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மருதனார்மடம் சந்தைத் தொகுதியின் முன்பாக இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஏனைய கட்சித் தலைவர்கள், வேட்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டத்துக்கு முன்னதாக, தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த–5)

### கே.பி குறித்து

ஒருவர் கேள்வி எழுப்பினார்.


அதற்குப் பதிலளித்த சுஜீவ சேனசிங்க, கே.பி தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்துப் பரிந்துரைப்பதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழுவின் அறிக்கை இன்னமும் சட்டமாஅதிபருக்கு கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

(த–5)


## மரண அறிவித்தல்

### சோமு கதிரமலை

தோற்றம்: 23.11.1937



மறைவு: 17.07.2015

புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமு கதிரமலை நேற்று முன்தினம் (17.07.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமு- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னர்-சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகனும், நாகம்மாவின் பாசமிகு கணவரும், குகநேசன் (மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்-வடக்கு மாகாணம்), சிவகங்கை ஆகியோரின் பாசமிகு தந்தையும், அபிராமி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும், தேனுகன், கஜானன், ஜாகவி, தனுசன், தர்சாயினி சங்கவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புத்தூர் கிழக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் புத்தூர் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஸ்ரீகுமரகுருபரன் சனசமூக நிலையத்தடி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

(C/17995) (10.6)

## கலைமகள் வி.கழகத்தின் முடிவுகள்

வேரவில் கலைமகள் விளையாட்டுக்கழகம் மறைந்த கழக வீரர்களின் நினைவாக வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு. இளந்தளிர் அணிக்கும் பூநகரி கலையொளி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பூநகரி கலையொளி அணி 1:0 என்ற கோல் கணக்கிலும், இரணைமாதா நகர் சென்.மேரிஸ் அணிக்கும் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரணைமாதா நகர் சென்.மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்றன. (ம-23)

## வடமாகாண பூப்பந்தாட்டத் தொடர்

உலகத் தமிழர் பூப்பந்தாட்டச் சங்கம், வடமாகாணப் பூப்பந்தாட்ட சங்கம் மற்றும் வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சு ஆகியன இணைந்து நடத்தும் வடமாகாண பூப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 31ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.
15வயது 19வயதுப் பிரிவினருக்கான ஆட்டங்களும் 40வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஆட்டங்களும் குறித்த தொடரில் நடைபெறவுள்ளன. தொடர்களில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் மற்றும் கழகங்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு ஏற்பாட் டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-108)

# இமாலய வெற்றியுடன் இறுதிக்குள் நுழைந்தது இமையாணன்

கரணவாய், ஜூலை 19
கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம் 35 ஓட்டங்களால் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது.
ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டத் தொடர் அல்வாய் மாலிசந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டமொன்றில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும் தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகமும் மோதின.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைக் குவித்தது. பந்துவீச்சில் நாவலர் அணி சார்பில் சஞ்சி 4 இலக்குகளையும் சுதன் 2 இலக்குகளையும் கைப் பற்றினர்.
84 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தும்பளை நாவலர் அணி எதிரணி யின் பந்துவீச்சிற்கும் களத்தடுப்பு வியூகங்களுக்கும் முகம் கொடுக்க முடியாமல் 48 ஓட்டங்களுக்குள் சுருண்டு 35 ஓட்டங்களால் தோல் வியடைந்தது. பந்துவீச்சில் இளைஞர் அணி சார்பாக ஜசிந்தன் 6 இலக்குகளையும் சைமன்ஸ் 3 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம-108)



9 மாதங்களுக்கு முன்னர் ஜுல்ஸ் விபத்தில் சிக்கியதன் ஒரு பதிவு

## சொந்தத் தொடரில் நீக்கிளஸை வீழ்த்தி சென். அன்ரனிஸ் கௌரவ வெற்றி

தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடந்தும் ரி-20 துடுப்பாட்டத்தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் அணி 156 ஓட்டங்களால் சென்.நீக்கிளஸை அபார வெற்றிகொண்டுள்ளது.
மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து சென்.ஹென்றிஸ் அணி மோதிக் கொண்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் அணியினர் 20பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக சுகந்தன் 79 ஓட்டங்களையும் மேனன் 59ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நீக்கிளஸ் அணி சார்பில் அன்ரனி 2 இலக்குகுளையும் விஜயகுமார், ராஜன் இருவரும் தலா ஓர் இலக்7கினை யும் கைப்பற்றினர்.
229 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். நீக்கிளஸ் அணியினர் சகல இலக்குகளையும் இழந்து 72 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். அதிகபட்சமாக அஜந்தன் 22 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் அணி சார்பாக ராயு, அஜன் இருவரும் தலா 3 இலக்குகளையும் கிளின்ரன். 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23)

## கொக்குத்தொடுவாய் மாணவி யதுர்ஷனாவுக்கு பாடசாலை சமூகத்தினரால் மகத்தான வரவேற்பு



யாழ்ப்பாணம், ஜுலை 19
வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மாகாண மட்ட தடகளத்தொடரில் தங்கப் பதக்கம் உட்பட மூன்று பதக்கங்களைக் கைப்பற்றிய முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் அ.த.க. பாடசாலையின் மாணவி ஜெ.யதுர்ஷனாவுக்கு கல்லூரி சமூகத்தினரால் நேற்று முன்தினம் மகத்தான வரவேற்று வழங்கப்பட்டுள்ளது.
மாகாணமட்ட தடகளத்தொடரில் கலந்துகொண்டு நீளம் பாய்தலில் தங்கப்பதக்கத்தையும், 200 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும், 100 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றியதன் காரணத்தினாலே யதுர்ஷனாவுக்கு இவ்வாறு உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.
கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலையின் அதிபர் திரு. த.கமலதாஸன் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் உறுப்பினர் இ.ரவீந்திரன், சிறப்பு விருந்தினர்களாக உடற் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் மைக்கல் திலகராஜாவும் உடற் கல்வி ஆசிரிய ஆலோசகர் கோரஸ்டிலானும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

## கார்பந்தய வீரர் ஜூல்ஸ் நேற்று சாவடைந்தார்

கார்பந்தயத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் கார்விபத்தில் சிக்கி 9 மாதங்கள் வரை கோமா நிலையில் இருந்த 25வயதேயான பிரான்ஸ் நாட்டின் கார்பந்தய வீரர் ஜுல்ஸ் பியாஞ்சி நேற்று சாவடைந்துள்ளார்.
பிரான்ஸ் நாட்டின் முன்னணி கார் பந்தய வீரராக திகழ்ந்தவர் ஜுல்ஸ் பியாஞ்சி. பல்வேறு சாதனைகளுக்கு சொந்தக்காரரான ஜுல்ஸ், ஜப்பானில் உள்ள சுசூகா நகரில் நடைபெற்ற கார்பந்தயத்தில் விபத்தில் சிக்கினார். தலையில் பலத்த காயமடைந்த ஜுல்ஸ் கோமா நிலைக்கு தள்ளப்பட்டார். 9 மாதங்கள் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் நினைவு திரும்பாமலேயே அவரது உயிர் நேற்றுப் பிரிந்தது.
ஜுல்ஸின் சாவையடுத்து அவரது குடும்பம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜுல்ஸ் வாழ்ந்த காலத்தில் அவர் அனைத்தையுமே சிறப்பாக செய்திருக்கிறார். எனினும், அவரது போராட்டம் இன்று முடிவுக்கு வந்துள்ளது. ஜுல்ஸின் பிரிவால் ஏற்பட்ட வலி விவரிக்க முடியாத ஒன்று என குறிப்பிட்டுள்ளனர். (ம)

# உதைபந்தாட்ட வீரர் அல்சிடெஸ் கீஜா நேற்றுமுன்தினம் சாவடைந்தார்

முன்னாள் உருகுவே கால்பந்து வீரரும், புகழ்பெற்ற முன்கள ஆட் டக்காரருமான அல்சிடெஸ் கீஜா தனது 88ஆவது வயதில் நேற்று முன்தினம் மாரடைப்புக் காரணமாக சாவடைந்தார். இந்தத் தகவலை அவருடைய மனைவி பியாட்ரிஸ் உறுதி செய்துள்ளார்.
1950ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக்கிண்ண கால்பந்து தொடரின் இறுதிஆட்டம் பிரேஸிலின் புகழ்பெற்ற மரக்காணா மைதானத் தில் நடைபெற்றது. விறுவிறுப்பாக நடந்த அந்த ஆட்டத்தின் 79ஆவது நிமிடத்தில் அல்சிடெஸ் கீஜா கோல டிக்க, உருகுவே அணி 2-1 என்ற கோல் கணக்கில் பிரேஸிலை வீழ்த்தி 2ஆவது முறையாக உலகக் கிண்ணத்தை வென்றது. அந்த உலகக்கிண்ணத்தின் மூலம் புகழின் உச்சத்தைத் தொட்ட கீஜா, அந்த ஆட்டம் நடந்த 65 ஆண்டுகளுக்குப் பிறகு காலஞ்சென்றிருக்கிறார். 1950ஆம் ஆண்டின் உலகக் கிண் ணத்தை வென்ற உருகுவே அணியில் இடம்பெற்றிருந்தவர்களில் கடைசியாக உயிரிழந்தது கீஜாதான். (ம)



# தனிநபராக மெஸ்ஸி புலி





ஆர்ஜென்ரினா அணியின் அணித் தலைவரும் நட்சத்திர வீரருமான மெஸ்ஸி, பர்சிலோனா அணிக்காக ஒரு விதமாகவும் ஆர்ஜென்ரினாவுக்காக ஒருவிதமாகவும் விளையாடுகிறார் என்று அவர் மீது சமீபகாலங்களாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. உலகக் கிண்ணம், தென்னமெரிக்கக் கிண்ணம் என்று தொடர்ச்சியாகக் கிடைத்த வாய்ப்புக்களை ஆர்ஜென்ரினா கைநழுவவிட்டதுக்கு இதுவே காரணம் என்றும் மெஸ்ஸியையும் மரடோனாவையும் ஒப்பிடக்கூடாதென்றும் மெஸ்ஸியின் ரசிகர்களே அவர்மீது வசைபாட ஆரம்பித்தார்கள்.

இந்த நிலையில் இருவரையும் ஒப்பிட்டு ஆர்ஜென்ரினா ஊடகம் ஒன்று கருத்துத் தெரிவித்துள்ளது. அதிலுள்ள புள்ளிவிபரங்களின்படி மரடோனாவை பலவழிகளில் முந்திச் செல்கிறார் மெஸ்ஸி. அதாவது மரடோனா 34 ஆட்டங்களில் 91 கோல் அடித்துள்ளார். ஆனால் மெஸ்ஸி 46 ஆட்டங்களில் 103 கோல்களை அடித்துள்ளார். கழக மட்டத்தின்படி மரடோனா 588 ஆட்டங்களில் 312 கோல்களையும், மெஸ்ஸி 482 ஆட்டங்களில் 412 கோல்களையும் அடித்துள்ளார். மரடோனா ஒரு முறை சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் சிறந்த வீரர் விருதை வென்றுள்ளார். ஆனால் மெஸ்சி 4 முறை இந்த விருதை வென்றுள்ளார். மேலும் இதன்படி பார்க்கின்ற பொழுது மெஸ்ஸி தனிப்பட்ட முறையில் சிறந்த வீரர்தான். ஆனால் மற்ற வீரர்கள் ஒத்துழைக்காததால் தான் கிண்ணம் வெல்ல முடியவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# பழிதீர்க்கும் முனைப்பில் ஆஸி.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 5 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட ஆஷஸ் தொடரின் இரண்டாவது ஆட்டம் தற்பொழுது இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்த ஆட்டத்தின் இரண்டாம்நாளான நேற்றுமுன்தின முடிவில் இங்கிலாந்து 85–4 என்று தடுமாறி வருகிறது.


நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா எதிர்பார்த்ததைப் போல் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க முதலாம் நாள் முடிவில் ஆஸ்திரேலியா 337–1. சிமித் 129 ஓட்டங்களுடனும் றோயேர்ஸ் 158 ஓட்டங்களுடனும் தொடர்ந்து இரண்டாவது நாளுக்காக களமிறங்கினர். சிமித் நிலைத்துநின்றாலும் றோயேர்ஸ் இரட்டைச்சதத்தைத் தவறவிட்டார். பத்து ஓட்டங்களை முழுமையாக்குவதுக்கே படாதபாடுபட்டு பாதியிலேயே பவிலியன் திரும்பினார் கிளார்க். மத்தியவரிசையில் எவரும் நிலைப்பதாய்த் தெரியவில்லை. நீண்ட நேர போராட்டத்தின் பின்னர் நெவில் சிறிதுநேரம் தாக்குப்பிடித்தார். நெவிலின் உதவியுடன் இரட்டைச் சதத்தை எட்டினார் சிமித். லோட்ஸ் மைதானத்தில் ஆஸ்திரேலிய வீரரொருர் 77 ஆண்டுகளின் பின்னர் பெற்ற இரட்டைச் சதமாக சிமித்தின் இரட்டைச்சதம் பதிவானது. 215 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் சிமித்தை வீழ்த்தினார் ரூட். பின்வரிசை வீரர்கள் பதின்மத்துடன் பவிலியன் திரும்ப 566–8 என்ற நிலையில் ஆஸ்திரேலியா இருந்தபொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார் கிளார்க். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக புரோட் 4 இலக்குகளையும் ரூட் 2 இலக்குகளையும் வூட் மற்றும் அலி இருவரும் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.



567 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலைபெறலாம் என்ற முனைப்பில் களமிறங்கிய இங்கிலாந்துக்கு ஆரம்பத்திலேயே பேரதிர்ச்சி காத்திருந்தது. முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே ஓட்டங்கள் எதனையும் பெறாது ஓட்டம்பிடித்தார் லைத். இங்கிலாந்து 0–1. நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து ஆமைவேகத்தில் குக். அடித்தாடும் முனைப்பில் பலன்ஸ். அடித்தாடிய பலன்ஸை டக்குடன் பவிலியனுக்கு அனுப்பி அச்சுறுத்தினார் ஜோன்சன். ஜோன்சனின் பாணியில் பெல்லை போல்ட் டாக்கினார் ஹசில்வூட். சதநாயகன் ரூட்டும் ஒரே ஓட்டத்துடன் வந்த வழியில் திரும்ப நேற்றுமுன்தின இரண்டாம்நாள் முடிவில் இலங்கை 85–4. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஜோன்சன் 2 இலக்குகளையும் ஹசில்வூட், ஸ்ராக் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (ம)

# லோட்ஸ் ஆடுகளம் வெட்கக்கேடானது

ஆஷஸ் தொடரின் இரண்டாவது ஆட்டம் நடைபெற்றுவரும் இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானம் திறமையான அணிகளுக்குப் பின்னடைவாக உள்ளது. நாணயச்சுழற்சியில் வெல்லும் அணியே ஆட்டத்திலும் வெற்றிபெறும் என்ற நிலைமையை மாற்றும்படியாக லோட்ஸ் ஆடுகளம் முழுவதுமாகப் புனரமைக்கப்படவேண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளார் இங்கிலாந்தின் முன்னாள் அணித் தலைவர் வோகன்.



பாரம்பரியமான லோட்ஸ் மைதானத்தின் ஆடுகளம் தொடர்பாக வோர்கன் தெரிவித்ததாவது 'ஒரு அணியின் வெற்றிதோல்வியை நாணயச்சுழற்சி தீர்மானிப்பது வெட்கக்கேடானது. பாரம்பரியங்கள், பழமைகள் பேணப்படவேண்டியது அவசியம்தான். ஆனால் திறமையை மழுங்கடிக்கும் விதமாக இவ்வாறான பழமை பேணல்கள் அமைந்துவிடக்கூடாது' என்றார். (ம)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் இன்று ஞாயிறுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து சுடர் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து செஞ் சுடர் அணி மோதவுள்ளது. (ம–23)

# செரினாவை வீழ்த்துவேன் செரபோவா சபதம்



யு.எஸ். ரென்னிஸ் தொடரில் செரீனா உட்பட யாரை எதிர்கொள்ள நேர்ந்தாலும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவேன். இவ்வாறு தெரிவித்துள்ளார் நட்சத்திர வீராங் கனையான மரிய செரபோவா.

யு.எஸ். ரென்னிஸ் தொடர் அடுத்தமாதம் 31ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடரில் தனது செயற்பாடு எவ்வாறிருக்கப்போகிறது என்பது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். யு.எஸ். தொடர் தொடர்பாக செரபோவா மேலும் தெரிவித்ததாவது 'நடப்பு வருடத்தில் நடைபெற்றுமுடிந்த பெரும்பாலான தொடர்கள் எனக்கு வெற்றிதரும் தொடர்களாகவே அமைந்துள்ளன. அதனால்தான் ஜனவரியில் நான்காவது இடத்திலிருந்து தற்பொழுது இரண்டாவது இடத்தில் உள்ளேன். ஆனால் நினைத்ததைப்போன்று கிண்ணத்தைக் கைப்பற்ற முடியவில்லை என்பது ஏமாற்றமளிக்கிறது. யு.எஸ்.தொடரில் என்னை எதிர்கொள்பவர் எவராக இருந்தாலும் அவரை எப்பாடுபட்டாவது வென்று கிண்ணத்தைக் கைப்பற்றுவேன்' என்றார். (ம)

# நவஜீவன்ஸ் எதிர் சென்.அன்ரனிஸ் இறுதியில் இன்று பலப்பரிட்சை





யாழ்ப்பாணம், ஜுலை 19

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு மின்னொளியில் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

குறித்த இறுதியாட்டத்தில் யாழ். மாவட்டத்தின் முன்னணி அணிகளான உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும், பாசையூர் சென்.அன்ரனீஸ் அணியும் மோதவுள்ளன. அதற்கு முன்னர் இடம்பெறும் மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது.

இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருத்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் சிறப்பு விருத்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி சிறி சற்குணராஜா, மத்திகை ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் உமாசங்கர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம–108–23)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

### af பிரெஞ்சு மொழி



பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் **FRENCH EMBASSY** யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **AF** மட்டுமே. யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் **AF** மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)** ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் **AF** இல் படித்தே **FRANCE, CANADA...** செல்கிறார்கள். யாரும் படிக்கலாம்.

**26.7.15, சனி,ஞாயிறு 2-4 pm உடன் பதிவுசெய்யுங்கள்**

**021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்**

## கதிர்காம யாத்திரைக்கான சிங்ககிரி பெருந்து சேவை





யாழ்ப்பாணம் - கதிர்காமம் இருவழிப் பயணத்தை மேற்கொள்ள இருப்பவர்களுக்கு

**சிங்ககிரி பேருந்து சேவையைப் பெறுவதற்கு**

கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொண்டு உங்கள் ஆசனப் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

யாழ். தொடர்புக்கு
வரணி புக்கிங் சென்ரர்.
021 222 2868, 077 604 8921

கதிர்காமப் பதிவுகளுக்கு
071 838 2916

புறப்படும் நேரம் தினசரி - 3.50pm
பேருந்து தொடர்புகளுக்கு: 077 978 7824, 077 529 9015

## Personal Class-கணினி

- 10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
- Ms office, Internet & E-mail, DTP, Web Design, Graphic Design, சிறுவர்களிற்கான கற்கைநெறி.
- பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
- குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

**TP:0779672038 ஆசிரியர்:KRC**

## வடமாகாணத்திற்கான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி- 2015

வல்வெட்டித்துறை, நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் 'தினச் செய்தி'யின் (www.thinacheithi.com) இணையத்தள அனுசரணையுடன் வடமாகாணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை நடத்த திட்டமிட்டுள்ளது.

இந்த உதைபந்தாட்ட போட்டியில் 11 பேர் கொண்ட விளையாட்டு வீரர்கள் ஒவ்வொரு அணியிலும் பங்குபற்றுவார்கள். இந்தப் போட்டிக்கு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதி வழங்கியுள்ளது.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு ரூபா இரண்டு இலட்சம் பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும், தினச்செய்தி சுழற் கோப்பையும் வழங்கப்படும்.

2ஆம் பரிசு 1 லட்சம் ரூபா
3ஆம் பரிசு 50 ஆயிரம் ரூபா
4ஆம் பரிசு 25 ஆயிரம் ரூபா

கால் இறுதிப் போட்டியில் பங்குபற்றிய எஞ்சிய நான்கு அணிகளுக்கும் தலா பத்தாயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்படும்.

இப்போட்டியில் பங்குபற்ற முன்வரும் கழகங்கள் 25.07.2015இற்கு முன்னர் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகத் தலைவர் க.சதீஷைத் (தொ.இல.0773946463) தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.

முதலில் பதிவு மேற்கொள்ளும் ஐம்பது உதைபந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்கப்படும்.

19.07.2015

க.சதீஷ்
(தலைவர், நெற்கொழு கழுகுகள்
விளையாட்டுக் கழகம்,
வல்வெட்டித்துறை)

(59784)(10.6.3)

## வெளிநாட்டு உயர்கல்வி

பகுதி நேர வேலைவாய்ப்புடன்

**ஹோட்டல் முகாமைத்துவம் சிங்கப்பூர் மலேசியா**

ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L

- 2 வருட கற்கைநெறிக்கட்டணம் 350,000/=
- கவர்ச்சிகரமான மாதாந்த கொடுப்பனவுகள்

100% விசா உத்தரவாதம் வழங்கப்படும்




iCS Study Overseas

Hotline: 077 3013060

77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
021- 4926222

## விரைவான வேலை ! நிறைவான இலாபம் !!

## ஜூஸ் பக்கெட் மெசின்




தமிழில் தொடர்பு கொள்ள

**077 391 8870**

WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

## நீங்களும் மருத்துவராகலாம்

**Doctor of Medicine (MD)**
(வைத்திய முதுமாணி)
Vitebsk State Medical University (VSMU)
Belarus (Eastern Europe)

O/L & A/L மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் !!!



**Hotline - 0776 28 48 45**

BIMY | PATHE STUDY MEDICINE

(சென்றவாரத் தொடர்ச்சி.....)

**நீங்கள் மருத்துவத்துறையில் சாதிக்க விரும்புபவரா !!!**
**உங்கள் இலட்சியம் ஓர் மருத்துவராவதா !!!**

Belarus நாட்டிலுள்ள இந்த பல்கலைக்கழகத்தில் Doctor of Medicine - MD பட்டப்படிப்பிற்காக அனுமதிக்கப்படுகின்ற மாணவர்கள் ஒவ்வொரு குழுவிலும் 10 மாணவர்கள்கொண்ட சிறுசிறு குழுக்களாக பிரிக்கப்பட்டு அவர்கள் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தப்படுகின்றது.

- **எத்தனை இலங்கை மாணவர்கள் தற்பொழுது இந்த பல்கலைக்கழகத்தில் கல்விகற்று வருகின்றனர்?**
  315 மாணவர்கள்
- **எத்தனை வருடங்கள் மாணவர்கள் வகுப்பறை கல்வியை (Theory Classes) தொடரவேண்டும்?**
  முதல் 3 வருடங்கள், சகல நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய வகுப்பறைகளில் விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன.
- **இந்த கற்கை நெறியின் பயிற்சி நெறிக்குரிய காலம் எவ்வளவு?**
  இறுதி 3 வருடங்கள் (Clinical Training)
- **இந்த இறுதி 3 வருடங்களில் மாணவர்கள் எவ்வாறு வழிநடத்தப்படுகின்றனர்?**
  Belarus நாட்டிலுள்ள 10400 படுக்கை வசதிகளைக்கொண்ட பல்வேறுப்பட்ட 14 அரச போதனா வைத்தியசாலைகளில் பயிற்சியுடன் சேர்ந்த கல்வி வழங்கப்படுகின்றது. இதன் போதும் மாணவர் குழுக்களில் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படுகிறது.
- **இந்த பயிற்சி கற்கை நெறியினால் மாணவர்கள் அடையும் நன்மை என்ன?**
  இந்த பட்டப்படிப்பை நிறைவு செய்து மாணவர்கள் 3 வருட வேலை அனுபவத்துடன் வெளியேறுகின்ற காரணத்தால் உலகிலுள்ள தரம் வாய்ந்த வைத்தியசாலைகளில் இலகுவாக வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்கூடியதாக இருக்கின்றது.

(அடுத்த வாரமும் தொடரும்.....)

Official Partners for Nothern Province
ExamPoint (Pvt) Ltd.
No 120/6, Palaly Road, Kantharmadam,
Jaffna, Sri Lanka

BIMY | PATHE STUDY MEDICINE www.pathestudy.org

e-mail : info@exampoint.lk | Web : www.exampoint.lk | Tel : 021 2216400

## மரண அறிவித்தல்



**திருமதி உமாபதிதேவி சிவசுப்பிரமணியம்**

பிறப்பு 17 . 04 . 1947 — இறப்பு 15 . 07 . 2015

பன்னாலை தெல்லிப் பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உமாபதிதேவி சிவசுப்பிரமணியம் 15.07.2015 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் செல்லம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து அண்ணப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகளும் சிவசுப்பிர மணியம் அவர்களின் அன்பு மனைவியும் சயந்தன்(கனடா), முகுந்தன் (Proprietor, Jupiter Construction) ஆகியோரின் அன்புத் தாயாரும் நடேசரூபி (கனடா), பானுமதி (ஆசிரியர் யா/பன்னாலை சேர் கனகசபை அ.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், பாலசிங்கம், நாகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரயேஸ், பிரதீப், அபிநயன், வக்சயன், கபிநயன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சரஸ்வதியம்மா மற்றும் அன்ன பூரணம் (கனடா), இராசம்மா, லயன் ஆறுமுகநாதன் (தொழிலதிபர் தெல்லிப்பழை), பரஞ்சோதி , பரமேஸ்வரி, இரஞ்சினி, வசந்தாதேவி ஆகியோரின் மைத் துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2015) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை, செம்பொன் வாய்க்கால் இந்து மயாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பன்னாலை, தெல்லிப்பழை.
T.P - 0094212059720

தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.